www.tamilarangam.net

# மனிதம்



Manitham Juni 1993 22

வைகாசி – ஆனி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- இளைய அப்துல்லா

அழுத கண்கள்
கண்ணீர் இன்றி
காய்ந்து போகும்
பட்டினி விதானங்கள்
மீண்டும் மீண்டும்
பந்தியமைக்கும்

வெறுஞ் சோறும்
தண்ணீரும்
தொண்டிக்குள்
இறங்கி
வெறுப்பு ஏப்பமாய்
வெளியில்
வரும்

நினைவுகள்
மட்டும்
பழையதை
இரைமீட்கும்.

நெருஞ்சி முள்ளாய்
மனது
இழிந்து
ஊனம் வடியும்

போர்ச் சத்தம்
காது கிழியக்
கேட்கும்

நிதானமிழந்து
போன
இருபத்தைந்து
வயது
அறுபதாய்
அறளைபேந்து
விளிக்கும்

புத்தி
கெட்ட
சமூகத்தின்
வித்துக்களை
ஊன்றி ஊன்றி
இன்னுமொரு
சமுதாயம்
உயிர்த்துக்
கொள்ளும்

நிஜங்கள்
கிடப்பில்
உறங்கிக்
கொள்ள
ஈழமாதாவின்
பிரேதம்
சுடுகாட்டை
நோக்கி
இழுத்துச்
செல்லப்படும்

✱

www.tamilarangam.net

# மனிதம்



**Mai + Juni**
**வைகாசி - ஆனி**
**1993**

Zwei monatlich einmal
(இரு மாதத்திற்கு ஒருமுறை)

***Impressum***
***&***
***Herausgeber :***

**Manitham**
Postfach - 12
3000 Bern -11
SCHWEIZ

***Redaktion :***
V.Logadas
M.Narendran
S.Ragavan
&
Manitham Redaktion Komitee

***Abonnement :***
**22 SFr** (pro Jahr)

***Post Konto :*** Manitham
3000 Bern - 11
Pc : 30-37152-1

***Bank Konto :***
Schweizerische Kreditanstalt
3001 Bern
Manitham
220348-70

***Druck***
Böhlen Druck AG
4912 Aarwangen

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற லலித் அத்துலத் முதலியினதும் ஜனாதிபதி பிரேமதாசாவினதும் படுகொலைகளானது இதுவரை நிலவிவந்த இலங்கையின் பாராளுமன்ற ஜனநாயக வழிமுறைக்கு பெரும் அச்சுறுத்தலை விடுத்துச் சென்றுள்ளது.

லலித்தினதும் பிரேமதாசாவினதும் அரசியல் பாத்திரம் சமனற்றதென்ற போதிலும் இரு கொலைகளினதும் பின்னணியில் இருந்து நோக்கும்போது, இதை ஒரு ஜனநாயக மரபிற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே கருதவேண்டியுள்ளது. இன்னும் விரிவாக கூறுவதாயின் இதுவரை காலமும் தேர்தல் மூலம் சந்தித்து முறியடிக்கப்பட்டு வந்த அரசியல் எதிரிகளை ஆயுத முனையில் அழித்தொழிக்கும் வடிவத்தை இலங்கையின் அரசியல் சூ ழல் பெற்றுக்கொண்டுள்ளது. இதனை தோற்றுவித்ததிலும் வளர்த்தெடுத்ததிலும் மேற் கூறப்பட்டவர்களினதும் பங்கு கனிசமானது. அதில் பெரும்பங்கு பிரேமதாசாவிற்கு உரியது.

1959 ம் ஆண்டு பண்டாரநாயக்க படுகொலை செய்யப்பட்டு பின்னர் 30 வருடங்களுக்கு பின்னர் நிகழ்ந்த பெரியதொரு அரசியல் தலைவரின் கொலையாக இக் கொலை அமைந்துள்ளது. தமிழ்மக்களின் போராட்டத்துடன் இக் கொலையை சம்பந்தப்படுத்தாது நோக்குமிடத்து, தனக்கு எதிராக எழக்கூடிய எந்த ஒரு சக்தியையும் படுகொலையின் மூலம் ஒழித்துக்கட்டும் வழிமுறையை இலங்கை அரசியலில் அரங்கேற்றி வைத்தவர் பிரேமதாசாவே.

அனைத்து அதிகாரமும் கொண்ட பதவியாக ஜனாதிபதி பதவியை ஜே. ஆர். கொண்டு வந்தார். இவர் அதன் அடுத்த கட்டத்திற்கு சென்று பாராளுமன்றத்தில் இருக்கக்கூடிய முக்கிய அமைச்சர் பதவிகளையும் தனது கையில் எடுத்துக்கொண்டு பாராளுமன்றத்தையே தனது கைப்பொம்மையாக்கியதுடன், தனக்கு எதிராக எந்த உறுப்பினர்களும் செயற்படவோ கருத்துத் தெரிவிக்கவோ முடியாதவகையில் எல்லோரிடமும் இருந்து ராஜினாமாக் கடிதத்தைப் பெற்றுவைத்திருந்ததுடன் மறைமுகமான கொலை மிரட்டல்களையும் செய்து ஓர் சர்வாதிகாரிபோல் செயற்பட்டவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் மக்களது பிரச்சினையில் வெளியில் சமாதானமும் பேச்சுவார்த்தையும்தான் தீர்வு என மேடைக்கு மேடை பேசிக்கொண்டு, நடைமுறையில் யுத்தத்தையே தீர்வாகக் கடைப்பிடித்து வந்தவர். பாராளுமன்றத்திலும், வெளியிலும் இருக்கக்கூடிய ஆதரவையும், செல்வாக்கையும் கொண்டு தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காண கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் எதிர்க்கட்சிகளின் சிறு எதிர்ப்புகளில் பறக்கவிட்டு தனது பதவியைப் நீடித்துக் கொண்டவர்.

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு பத்திரிகைச் சுதந்திரத்தை அடக்குவதில் முதலிடம் வகித்தவர். அரசுக் எதிராக செயற்படும் பத்திரிகைகளைத் தடைசெய்வதிலும் பத்திரிகைகளைத் தாக்கி அழிப்பதிலும் முனைப்புடன் செயற்பட்டார். இந்தவகையில் இவரது நடவடிக்கைகளை அம்பலப்படுத்தியதற்காக நேர்மையான பத்திரிகையாளரான றிச்சார்ட் டி சொய்சாவைப் படுகொலை செய்வித்து சர்வதேச ரீதியான கண்டனத்திற்குள்ளானவர்.

தனக்கு எதிராகச் செயற்பட்ட அரசியல்வாதிகள் என்ற வகையிலேயே விஜய குமாரணதுங்க, லலித், ஜே. வி. பி தலைவர்களையும் மற்றும் 50,000 க்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்களையும் பலிகொண்டவர். இவற்றைவிட றஞ்சன் விஜயரட்ன, அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், இராணுவத் தளபதி டென்சில் கொப்பேகடுவ போன்றோரது படுகொலைகளும் இவரது பங்களிப்புடன் நடந்தேறியவைகளாகவே இன்றுவரை கருதப்படுகிறது.

**சந்தாவிபரம்:-**

**இலங்கை – இந்தியா வாசர்களிற்கு இலவசம்**

**தனிப்பிரதி 3 Sfr**

**ஒருவருட சந்தா 22 Sfr**

**ஐரோப்பிய நாடுகளிற்கான சந்தா 25 Sfr**

Postchek Konto:-
30-37152-1
Manitham

Bank Konto:-
Schweizerische Kredit
Anstalt
3001 Bern
Nr:- 220348-70

✸ ✸ ✸

**அடக்கப்பட்ட புதிய விதைகள்**

*வயல்கள் விளைந்து*
*வாழ்த்துக்கள் கூறின*
*ஆனை புகுந்து*
*அதனை மிதித்தது*

*சிதைந்த மணிகள்*
*அன்னிய பூமியில்*
*விசிறி விழுந்து*
*சிதறி மறைந்தன*

*வேலி மரங்களை*
*வேலிகள் காக்க*
*வயல்கள் இன்று*
*வெறுமையில் காய*

*உண்மை வேலிகள்*
*புனைய வென்று*
*பழைய வேலியின்*
*புதிய விதைகள்*
*நாற்றுப் போட*
*மேடை போட்டனர்*

*அதன்முன்*
*விளக்கு வைத்தவர்*
*யார் ..... ???*

யதார்த்தினி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாரதி கலைக் குழுவின்

## வசந்த காலக் கோலங்கள்

ஒரு – பார்வை



__லோகதாஸ்__

காற்றில் மிதந்து கொண்டிருந்த அந்த மனிதனைச் சுற்றி மட்டும் ஒரு மெல்லிய ஒளிக்கீற்று வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அனைத்து வெளிச்சங்களும் அணைக்கப்பட்டன. மண்டபத்தை இருள் கவ்விக் கொண்டது. மேடையில் ஒரு மூலையில் வெள்ளைப் பலகை ஒன்று தெரிந்தது.

காற்றில் மிதந்து வந்த அந்த மனிதன். ”நான் யார்? எங்கு செல்கிறேன்? எவ்விடம் நிற்கிறேன்?” என்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டவன், தொடர்ந்து மண்டபமே விழிக்கும்படியாக சிறந்த நடிப்பில் தனது உணர்வினை வெளிப்படுத்தினான். உணர்வு வெளிப்பாடு உச்சத்தை அடைந்த போதெல்லாம் அந்த வெள்ளைப் பலகையில் சில கோடுகளைக் கீறினான்.

சாதி வேற்றுமை, பெண்ணடிமைத்தனம், வேலிக்கு கதியால் போடுவதில் உள்ள எல்லைப் பிரச்சனை போன்ற சமூக சர்ச்சைகள் போன்றவற்றின் பாதுகாவலர்களாகவும், ஆண்ட பரம்பரை என்று கோசமிட்டுக்கொண்டும் வேலிக்குள் வாழும் மனிதர்களின் குறுகிய மனோநிலையை ஒவ்வொன்றாக அவற்றுக்குரிய பரிமாணங் களுடனும் வார்த்தையில் வடிக்க முடியாத உணர்வுகளுடனும் மேடையை அதிர வைத்த அந்தக் காற்று மனிதன். . . . . .

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து ஐரோப்பாவில் தஞ்சம் புகுந்த ஒரு அகதியாகத் தன்னை இனங்காட்டிக் கொண்டான்

சொந்த மண்ணிழந்து
உறவல் முகமும் பொருந்தாது
இரண்டும் கெட்டான் வாழ்க்கை. . . .

என்று

ஐரோப்பிய வாழ்வியல் கஷ்டங்களையும் மன உணர்வுகளையும் வெளிப்படுத்தினான். சொந்த மண்ணில் இருந்து தினம் தினம் எதிர்பார்ப்பவனுக்கு சில வாரங்களுக்கோ அல்லது மாதத்திற்கு ஒரு முறையோ வந்து சேரும் கடிதங்கள் . . . . .

சோகங்களையே செய்தியாகக் கொண்டு வருவதைச் சொல்லிக் கதறுகிறான். கண்ணீரால் முகத்தை நனைக்கிறான். விழுந்து புரண்டு தாய் மண்ணை அணைத்துக்கொள்ள அவாப்படும் உணர்வு வெளிப்பாட்டில் பார்வையாளரை மெய்சிலிர்க்க வைத்து விட்டான், அந்தக் காற்று மனிதன்.

மண்டபம் நிறைந்த சனங்களை எவ்வித பிசகுமின்றி சுமார் நாற்பது நிமிடங்கள் தன்பக்கம் ஈர்த்து வைத்திருந்த இம் மனிதன் . . . . .

இறுதியாக ஐரோப்பிய இயந்திரமய வாழ்வியலை குறிப்பிட்டு நடிப்பினூடாக இயந்தர மனிதனுக்கு ஒப்பிட்டு விடுகிறான். இச் சந்தர்ப்பம் கையில் சாவிகளைக் காவிக்கொண்டு ஆலை இயந்திரத்தில் ஓடிக்கொண்டிருக்கும் பட்டிகளுடன் இயந்திரங்களுக்குள் சென்று மீண்டுவரும் சார்லி சப்பிளினின் படக்காட்சி ஒன்றினை நினைவு படுத்தியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓவியமாக்கப்பட்ட அவனது கோடுகள் இறுதியில் மனிதர்களின் வெவ்வேறு பரிமாணம் கொண்ட சிந்தனைகளை வெளிப்படுத்தும் மூன்று மனிதர்களின் முகத்தைத் தோற்றுவித்தது.

இந் நிகழ்ச்சியில் கவிதை மொழி ஒரு ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டதனால் இதனைக் கவிதா நிகழ்வு எனலாமா?. இல்லை, இது கவிதா நிகழ்வின் ஒரு உச்ச வடிவம்தான்! ஆயினும் இது கவிதா நிகழ்வு அல்ல. உணர்வுகள் ஓவியமாக்கப் பட்டமையினாலும் வேறுபட்ட தனிமனித நடிப்பினாலும் கவிதா நிகழ்வில் இருந்து இந் நிகழ்ச்சி வேறுபடுகிறது. அப்படியானால் இந் நிகழ்ச்சியை எப்படி அழைப்பது? ஐரோப்பிய மரபிற்கிணங்க அறிமுகப்படுத்தியவரின் பெயரினை நிகழ்ச்சிக்குச் சூட்டி விடுவதே பொருத்தம்.

ஆம்! 15. 5. 93 சனிக்கிழமை பேர்ன் மாநகரில் பாரதி கலைக் குழு வழங்கிய **"வசந்தகாலக் கோலங்கள்"** கலைமாலைப் பொழுதில் விளம்பரத்தில் குறிப்பிடப் படாமலே சிறப்பிடம் பெற்ற இந் நிகழ்ச்சியை **"சாம்சன் நிகழ்ச்சி"** என்றழைத்து விடுவோம். ஏற்கனவே (பல நூல்களுக்கு முகப்பு உட்பட) பல ஓவியங்களைத் தீட்டியும், சில நாடகங்களில் தோன்றியும், "பலகுரல்" நிகழ்ச்சியினூடாகவும் ஐரோப்பிய தமிழர் மத்தியில் தமது கலைத்திறனை வெளிப்படுத்தி வரும் சாம்சன் (பிரான்ஸ்) தமது உணர்வுகளை (அருந்ததி மூலம் கவிதையாக்கி) தாமே தயாரித்தளித்த இந்த (சாம்சன்) நிகழ்ச்சியினூடாக ஒரு பூ ரணத்துவம் வாய்ந்த கலைஞனுக்குரிய அம்சங்களைப் பெற்றுவிடுகிறார்.

நிகழ்ச்சியின் வடிவத்திற்கு ஏற்ப 'ஓர்கனை' மீட்டியும், 'தபேலா' வாசித்தும், "சாம்சனின் நிகழ்ச்சிக்கு" உயிர் ஊட்டி, மெருகேற்றிய "இசைஞர்கள்" முறையே ரமேஷ் (Chur), கருணா (Zurich) ஆகியோர் பாராட்டுக் குரியவர்கள்.

1990 நவம்பரில் "கார்த்திகைத் தீபங்கள்" நிகழ்ச்சியுடன் அறிமுகமான பாரதி கலைக் குழுவினர் ஒன்றரை வருடங்களின் பின்னாவது, இரண்டாவது நிகழ்ச்சியான "வசந்தகாலக் கோலங்கள்" கலைமாலைப் பொழுதினை வெளிக்கொணர்ந்தனர். ஏற்கனவே விட்ட தவறை களையும் விதத்தில் இம்முறை சிறுவர் நிகழ்ச்சிகளுக்கும் இடமளித்திருந்தமை குறிப்பிடத்தக்க மாற்றமாகும். இச் சிறுவர் நிகழ்ச்சியில் சிறுவர்களுடன் தம்மையும் ஒரு சிறுவனாக இணைத்துக் கொண்டு, 'சண்' தயாரித்து அளித்த (புதுவிதமாக அமைந்த) "மழலைச்சோலை" நிகழ்ச்சியும், அத்துடன் நடந்த சிறுவர் நடனமும், நடன ஆசிரியை பாபு பவானியின் (Basel) மேற்பார்வையில் உருவான சிறுமிகள் நடனங்களும், Thun தமிழ்ப் பாடசாலை ஆசிரியை திருமதி தங்கராஜா வழங்கிய சிறுமிகளின் குறத்தி நடனமும் சிறப்பிடம் பெற்றிருந்தன.

**"மழலைச் சோலை நிகழ்ச்சி"** சிறுவர்களின் இயல்புடன் கூடிய இயற்கையாக அமைந்த போதும், இரு சிறுவர்களின் மேடைப் பேச்சுக்கள் சிறுவர்களின் இயல்புகளுக்கும், வயதிற்கும் ஏற்ற வாக்கியங்களுடனும், அபிநயத்துடனும் அமையாததால் வெறும் செயற்கையாகக் காணப்பட்டது. சிறுவர் நிகழ்ச்சி நேரக் கட்டுப்பாடின்றி தொடர்ந்து கொண்டிருந்தமையை நேரம் பிந்தியாயினும் நிகழ்ச்சிக் குழுவினர் கண்டு கொண்டதனால் பார்வையாளர்கள் சலிப்பூ ட்டுவதிலிருந்து மீட்கப்பட்டனர்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*"கவிதைக் களம்".* இது கவியரங்கில் இருந்து வேறுபட்ட ஒரு நிகழ்ச்சி. கவிதா நிகழ்வுக்கு முந்திய அவதாரம் எனலாம். கவிதைகளை அதற்குரிய உணர்வு வெளிப்பாட்டுடன் வாசிக்கப்பட வேண்டியதே அதன் தாற்பரியம் ஆகும். ஆனால் இங்கு மூவர் கவிதைகளை வாசித்த போதும், இத் தாற்பரியத்தை வெளிப்படுத்தாமை, அவர்களது தயாரிப்பின்மையையும், அனுபவமற்ற தன்மையையும் வெளிப்படுத்தியது.

**வாழ்வைப் பாடவந்தோம்**
**தொலைந்த நம் வாழ்வினை**
**பாடவந்தோம் . . . . .**

என்று

ஈழத்து பாரம்பரிய கலை வடிவத்தில் ஒன்றான வில்லுப்பாட்டு ஆரம்பமானது. துரத்தும் இனவாதமும், நிறவெறியும் ஒருபுறமும், குளிர்ச் சூழலின் வாழ்வியல் நெருக்கடிகள் இன்னொரு புறமாக சூழ்ந்திருக்க. . . .

**நீலக் கடலினிலே நிலவு வந்து முகம் புதைக்கும்,**
**ஆழக் கடலினிலே ஆயிரமாய்ப் பிணம் மிதக்கும்,**
**சோலைக் குயில்களெல்லாம் சுடலையிலே வாடிநிற்கும்,**
**ஈழத் திருநாடாம்**
**எம் இனிய தாய்நாடு . . . . .**

என்றும்,

**தென்னை மர காற்றிழந்து**
**தேனிலவு அதை மறந்து**
**அன்னை மடி பழி கொடுத்து**
**ஆயுதங்கள் விளையவிட்டு . . .**

என்றும்

உள்ளத்தில் நங்கூரமிட்டு இதயத்தில் உறங்கிக் கிடந்த தாய் மண்ணின் நினைவுகளைக் கிளறிவிடும் அரிய பாடல்களைக் கொண்டிருந்தது. ஆயினும் நகைச்சுவையுடன் கூடிய ஒரு கலைவடிவமாகத் திகழும் வில்லுப்பாட்டில் **"தொலைந்த வாழ்வை"** பாட வந்ததினால், தலைப்புக்குரிய தாக்கத்தை உணர்த்துவதற்குப் பதிலாக நகைச்சுவைக்கு மேலிடம் அளித்திருந்தது.

பாரதிக் கலைக்குழு வழங்கிய **"காலம்"** (முழுமையான குறியீட்டு நாடகம்) முதல் இரண்டு காட்சிகளிலும், ஒரு சலவைத் தொழிலாளி உயர் சாதிப் பணக்காரர் ஒருவரினால் அடிமையாக நடத்தப்படுத்தப் படுவதையும், அச் சலவைத் தொழிலாளியின் வேலைப் பளுவையும் யதார்த்தமாக வெளிப்படுத்தியது. ஐரோப்பாவிற்கு வந்திருக்கும் இவ்விருவரும், எதிர்பாராத இடத்தில் ஒரே இடத்தில் ஒரே வேலைக்கு அமர்த்தப்படும் சந்தர்ப்பத்தில். . . .

உயர் சாதி பணக்காரருக்கு ஏற்படும் மனக் கிலேசத்தையும், வேலை செய்வதில் அவருக்குள்ள உள, உடல் கஷ்டங்களையும், சலவைத் தொழிலாளிக்கு வேலை இலகுவாக இருப்பதையும் மூன்றாவது காட்சி மெய்மைப் படுத்துவதுடன் நாடகம் முடிவடைகிறது.

நாட்டில் ஒரு வயதானவராகக் காணப்பட்ட சலவைத் தொழிலாளி, ஐரோப்பாவுக்கு வந்து இளமைத் துடிப்புடன் காணப்படுகின்ற குறிப்பிடத்தக்க குறைபாடு தவிர, வெள்ளைக்கார மேலதிகாரியாக (Chef) நடிப்பவர் உட்பட, மூவரது நடிப்பும் பாத்திரங்களுக்குரிய அம்சங்களை இயல்புடன் வெளிப்படுத்தி தரமாக அமைந்தது, "காலம்" நாடகம்.

மேலும் உயர் சாதி பணக்காரராக நடித்து, நாடகத்தை இயக்கிய பாஸ்கர் நாடகத்தில் தமக்கு இருக்கும் ஆழ்ந்த அனுபவத்தையும் கலைத் திறமையும் வெளிப்படுத்தியுள்ளார்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜேர்மனியில் இருந்துவந்த "கொஞ்சப் பேர்" நாடகக் குழுவினர் பூ மிக்குள் மறைந்துபோன சீதையின் மரணத்தையும் வாலியின் கொலையையும் மீட்டெடுத்து, இராமனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி **'இரட்டைக் கொலை வழக்கை'** விசாரணை செய்தனர். இராமனின் தேர் 'றைவநும்', வசிட்டரும், இராமனின் இக் கொலைகளுக்கு சாட்சிகள் ஆகினர். வழக்கறிஞர்கள், சாட்சிகள் ஊடாக நமது தேசத்தினதும், இந்திய மதவெறியினரதும் 'அரசியல்' பூ டகமாகவும், நகைச்சுவையுடனும் அமைந்து பார்வையாளரின் பாராட்டைப் பெற்றது "இரட்டைக் கொலை வழக்கு" நாடகம்.

இறுதியாக பிரான்ஸிலிருந்து வந்த "வட்டுக்கோட்டை நாட்டுக் கூத்து அபிவிருத்திக் குழுவினரின்" **'அர்ச்சுனன் தபசு'** நாட்டுக் கூத்து. ஐரோப்பாவிலும் நாட்டுக் கூத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து மிகுதியான செலவுகளுடன் மேடையேற்றி யமைக்காக பாரதி கலைக்குழுவினரை மெச்சத்தான் வேண்டும். நாட்டுக் கூத்தை வெளிப்படுத்திய முறைமையிலும், பாட்டுக்காரன், சம்பாஷணைகள் எதுவும் தெளிவற்றும், விளங்காமலும் இருந்ததினால் நாட்டுக் கூத்தைப் பார்க்க வேண்டும் என்ற அக்கறை சபையோருக்கு ஏற்படவில்லை. பலர் வெளியேறி விட்டனர். இந் நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு (பிரான்ஸ்) வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்தி குழுவினரும் அண்ணாவிமாரும் மாற்றங்களை ஏற்படுத்துவதில் அக்கறை செலுத்த வேண்டும். இம் மாற்றங்களை இரண்டு வகையில் செய்யலாம்.

ஒன்று பாடல்கள், வசனங்களை சகலருக்கும் விளங்கும் வகையில் வெளிப்படுத்தும் முறையில் நவீனத்துவத்தை கையாளுதல். தமிழ் நாட்டில், நவநீதகிருஷ்ணா விஜயலக்ஷ்மி குழுவினரும் இன்னும் குணசேகரா போன்றோரும் நாட்டுப்புறப் பாடல்களை வெளிப்படுத்துவதில் ஜனரஞ்சகமான நவீனத்துவத்தைக் கையாள்வதை இதற்கு உதாரணமாக கொள்ளலாம்.

மற்றது, உள்ளடக்கத்தை முழுமையாக மாற்றுவது. இன்றைய எமது நாட்டுச் சூழலையும், ஐரோப்பாவில் எமது வாழ்வியல் கஷ்டங்களையும் உள்ளடக்கமாகக் கொண்டு அதற்கேற்ற பாடல்களையும் உரையாடல்களையும் மையமாகக் கொண்டு வெளிப்பாட்டுத் திறனில் நவீனத்துவத்தைக் கையாள்தல். இதற்கு மௌனகுரு, தாசீசியஸ் போன்றோர் நல்ல உதாரணங்கள் ஆவர்.

மாற்றத்திற்குரிய இந் நிலைமைகளைக் கவனத்தில் எடுக்காவிடில் 'அர்ச்சுனன் தபசு' இன்னும் ஐந்து மேடைகளை ஏறும் பட்சத்தில், எமது பாரம்பரிய கலைவடிவங்களில் ஒன்றாக விளங்கும் நாட்டுக் கூத்தைப் பார்ப்பதற்கு எம்மவர் மனங்கொள்ளமாட்டார் என்பதை பிரான்ஸ் "வட்டுக்கோட்டை நாட்டுக் கூத்து அபிவிருத்திக் குழுவின்" அண்ணாவிமார்கள் மனதில் நிறுத்திக் கொள்வது நல்லது.


சிறுசிறு குறைபாடுகள் காணப்பட்டிருப்பினும், பாரதிக் கலைக்குழு வழங்கிய "வசந்தகாலக் கோலங்கள்" கலைமாலைப் பொழுது வெறும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளை மையப்படுத்தாமல், கருத்துச் செறிவுமிக்க பூ ரணத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக அமைந்தது என்பதில் ஐயமில்லை. இந் நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் ஜீவநாடியாக விளங்கிய இசையை வழங்கிய கருணா, சிறி, ரமேஸ் ஆகியோர் மிகவும் பாராட்டுக்குரியவர்களே! ✸

## புஷ்சின் கர்ஜனை

பனிப்போரை ஒழிப்பதற்காக சர்வதேச கூட்டு முயற்சிகளுக்கெல்லாம் தலமை கொடுத்து வந்த அமெரிக்கா இன்று பனிப்போர் முடிந்து விட்டது என்பதற்காக இதுவரை தான் வகித்த தலைமையில் இருந்து பின் வாங்க கூடாது .பனிப்போரில் ஈடுபட்ட நாடுகளின் உள்நாட்டு அரசியல்களில் கவனம் செலுத்த வேண்டும். இப்படி ரெக்சானிச பல்கலைக்கழகத்தில் பேசியிருக்கிறார் 92 நவம்பர் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் படு தோ ல்வியுற்று 93 ஜனவரியுடன் பதவியிழந்த . ஜோர்ஜ் புஷ்.

www.tamilarangam.net

# சிறையில் அடைக்கப்பட்ட ஒளி!



வசந்தன்

ஏகாதிபத்தியங்களுக்கும் அவற்றின் அடிவருடிகளுக்கும் மாபியாக்கள், போதைபொருள் விற்பனையாளர்கள், கொலை, கொள்ளைகள் செய்வோர் எல்லோருமே நல்லவர்கள், ஜனநாயகத்தின் சிறந்த பாதுகாவலர்கள், மனித உரிமைகளை மதிப்பவர்கள் ஆனால் புரட்சியாளர்கள், மக்களை நேசிப்பவர்கள் அவர்கள் பயங்கரவாதிகள், கொடூரமானவர்கள். இப்படித்தான் உலகம் முழுவதும் செய்திதொடர்புகளை தங்கள் கையில் வைத்திருக்கும் ஏகாதிபத்தியங்கள் அவதூறு பொழிகின்றன.அண்மையில் இத்தகைய அவதூறுக்கு ஆளானவர் பேரு நாட்டின் கம்யூனிசக் கட்சியான ஒளிரும்பாதையின் தலைவர் கொன்சாலோ அவர்கள்.

சென்றவருடம் செப்டெம்பர் மாதம் 12ம் திகதி பேருவை ஆளும் மாபியாக் கும்பலான பியூமோரியின் ராணுவத்தால் கைது செய்யப்பட்ட ஒளிரும் பாதையின் தலைவர் கொன்சாலோ பேருவின் தலைநகரான லீமாவில் பலத்த ராணுவப்பாதுகாப்புக்களுக்கு மத்தியில் நிலக்கீழ் சிறையில் வைக்கப்பட்டு தொடர்சியான துன்புறுத்தல்களுக்கு ஆளாகிவருகிறார். பேருவை ஆளும் சர்வாதிகார பீயுமோரி அரசு அவருக்கு ராணுவ நீதிமன்றத்தின் மூலம் மரணதண்டனை நிறைவேற்ற துடிக்கிறது. பீயுமோரி அரசு அமெரிக்காவுக்கு பேருவை அடகு வைத்தும், பங்கு மார்கெட்டின் மூலமும் பேருவின் பொருளாதாரத்தை சீர்குலைத்து வருகிறது. உள்நாட்டு உற்பத்தித்துறைகள், அரச உடமைகள் யாவும் அந்நிய ஏகபோக கம்பனிகளிடம் குத்தகைக்கு விட்டுள்ளது. இதனால் மக்களின் வாழ்க்கைதரம் சீர்கேடு அடைந்துள்ளது இத்தகைய துரோகதனங்களுக்கு எதிராகத்தான் கொன்சாலோ தலைமையில் புரட்சியாளர்கள் ஒன்று திரண்டு ஒளிரும் பாதை என்ற அமைப்பை ஏற்படுத்தி கடந்த 10 வருடங்களுக்கு மேலாக ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்து வந்தனர்.

இதனை முறியடிக்க அமெரிக்க பெருவின் இராணுவ சர்வாதிகாரி பியூமோரி அரசுக்கு ஆயுதம் நிதி போன்ற உதவிகளை அளித்து வந்தது. இதனால்தான் கொன்சாலோ கைது செய்யப்பட்டதும் பியூமோரி அரசுக்கு தனது வாழ்த்துக்களை அமெரிக்கா தெரிவித்துக் கொண்டது. கைது செய்யப்பட்ட ஒளிரும்பான தலைவர் கொன்சாலோவை அவரது நண்பர்களோ உறவினர்களோ, வைத்தியர்களோ எவருமே சந்திக்க முடியாது. அவரது வழக்கறிஞருக்கு கூட ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மற்று இராணுவத்தால் கைது செய்யப்பட்ட ஏனையோரும் தேச துரோக குற்றம் சுமத்தப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர். இப்படி மனிதகுலமே வெக்கித்தலை குனியும் வண்ணம் மிகவும் கேவலமாக மனித உரிமைகள் பெருவில் மீறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அமெரிக்காவுக்கும் அதன் சார்பு நாடுகளுக்கும் எதிரான நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படும் போது முண்டியடித்துக்கொண்டு கண்டன அறிக்கைகள் விடுகின்ற சர்வதேச மன்னிப்புச்சபை இப்போது கொன்சாலோ விவகாரத்தைப் பொறுத்தவரை தூங்கிக் கொண்டிருக்கிறது!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கருத்தாடல்**

# தேசிய சக்தியும் பாசிச சக்தியும்

## ஓர் அவசரக் குறிப்பு

இன்று ஈழத்திலும் சரி வெளிநாடுகளில் வாழும் முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் ஜனநாயக சக்திகள் ஆகியோரிடையே மிகவும் அதிகமாக கதைக்கப்பட்டு முடிவேயில்லாது தொடர்ந்தும் சலிப்பூட்டும் வகையில் விவாதிக்கப்படுவது; எமது போராட்டத்தை முன்னெடுக்கும் மூன்றாவது ஒரு அணியின் தேவைகுறித்த வாதப்பிரதிவாதங்கள் துரதிஸ்டவசமாக எம்மவரிடையே ஒரு மார்க்சோ, லெனினோ, மாவோவையோஒத்த தத்துவத்துறையில் மிகவும் சிறந்த நடைமுறையில் சரியான வேலைமுறைகளைக் ஏற்படுத்தக்கூடிய மேதைகள் இல்லாததுதான் எம்மவர்களின் சிதறல்களுக்கு காரணமோ என்ற ஐயப்பாடு இயல்பாக தோன்றுவது தவிர்க்கமுடியாததாக உள்ளது.ஏனென்றால் தத்துவார்த்தசமரில் ஈடுபட்டுள்ள பல்வேறு பிரிவினரும் தாம் அறிந்தவைகள் எழுதுபவைகள் மட்டுமே சரியானவை; மற்றவர்கள் பிழையாகவே பார்க்கின்றனர் என்பதும்; வேறுசிலர் பிரச்சனைகளின் மையங்களை புரிந்து கொண்டாலும் சரியான கருத்துக்காக போராடுகின்ற முன்முயற்சி இல்லாததும் அவரவர் தங்கள் கருத்துக்காக இடையிடையே எழுந்து குரல் கொடுத்துவிட்டு அடங்கும் நிவழ்வுகளைத்தான் அறியக்கூடியதாக இருக்கிறது.

சி.வசந்தன்

கடந்தகாலங்களில் நடைபெற்ற புரட்சிகள், போராட்டங்கள், தோல்விகளில் இருந்து படிப்பினைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மாறாக இத்தகைய சம்பவங்களுக்கு அவரவர் கற்றுக்கொண்டவைகளில் இருந்து விளக்கி வியாக்கியானங்கள் செய்வதும் எதிர் அணியினருக்கு மடக்கி பதில் அளிப்பது மட்டுமே பிரச்சனைகளை சரியாக புரிந்து கொண்டவர்கள் என்று நினைத்து கொலரை உயர்த்திக் கொள்வதுமே நடைமுறையாக உள்ளது. இவைகளே எதிர்காலத்திலும் தொடரும் என்றால் கடந்த காலங்களில் எமது போராட்டத்தில் எப்படி முன்கையெடுக்கும் ஆற்றலை இழந்திருந்தோமோ அத்தகைய நம்பிக்கை இல்லாத நிலை எதிர்காலத்திலும் தொடருவதை எத்தகைய காட்டுக் கூச்சலிட்டாலும் அடக்கிவிட முடியாது.

உதிரிகளாக அல்லது குழுக்களாக இருக்கின்ற எம்மவர்கள் மத்தியில் புலிகள் தேசிய சக்திகளாக இல்லையா, அக்கியப்புரட்சியா, தமிழ்ஈழமா, முல்லீம்மக்கள், மலையக மக்கள். . . . பற்றி எல்லோருமே தாம் அறிந்து கொண்டவைகள், கேள்விப்பட்டவைகளில் இருந்து எழுதிக் கொண்டிருக்கிறார்கள் இதற்குள் எமது அக்கியத்திற்கு தடையாக இருப்பது என்ன என்ற கேள்வியை எழுப்பினால் எப்படி பார்ப்பினும் எமது கற்றுக்குட்டித்தனமும், வரட்டுத்தனமுமே அன்றி வேறென்னவாக இருக்கமுடியும். புலிகளை தேசிய சக்திகள் என்று வரையறை செய்தால் என்ன இல்லாவிட்டால் என்ன, பாசிசசக்திகள் என்று வரையறை செய்தால் என்ன இல்லாவிட்டால் என்ன. புலிகளைப்பொறுத்தவரை எல்லோருமே எதிரிகளே துரோகக் குழுக்களை தேடி அழிப்பது போலவே முற்போக்கு சக்திகள், ஜனநாயக சக்திகள், மாற்றுக்கருத்துக் கொண்டவர்கள், தன்னார்வக்குழுக்களில் வேலை செய்பவர்கள் என்று தமது பாசிச அடக்கு முறையைத் தொடர்கின்றனர். எம்மவர்கள் உதிரிகளாக எத்தகைய எண்ணிக்கையில் இருந்த போதும் அவர்களின் கருத்துக்கள் மக்களிடம் சென்றடைவதை தடுப்பதிலும் அவர்கள் பொது எதிரிக்கெதிரான போராட்டத்தில் ஈடுபட்டால்கூட எதிரியை அழிப்பதிலும்பார்க்க அவர்களையே முதலில் அழித்தொழிப்பதற்கு முயல்கின்றனர். தளத்தில் செயற்படக்கூடிய சக்திகள் பேரினவாத அரசின்கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பிரதேசங்களில் செய்யக்கூடிய வேலைமுறைகளை கூட புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசங்களில் செய்வதை நினைத்துக்கூட பார்க்கமுடியாது உள்ளது. இத்தகையதோர் சூழ்நிலையில் நாம் ஒவ்வொருவரும் புலிகள் பற்றி ஏற்படுத்திக் கொண்டுள்ள வரையறைகளுடன் உடன்படுபவர்களுடன் ஐக்கியம்; அல்லது உமது முடிவே சரியானது இதை ஏற்றுக்கொண்டால்தான் ஐக்கியம்; இதைவிட முதலில் இவைகளை தீர்த்துக் கொண்டால்தான் அதாவது தேசியம், பாசிசம் போன்ற இன்னோரன்ன பல பிரச்சனைகளிலும் ஒரு வரையறை ஏற்படுத்திக் கொண்டபின்னர்தான் போராட்டம், ஐக்கியம் என்று கதைப்பதெல்லாம் மக்களின் விடுதலையை துச்சமாக கருதிசெயற்படும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அணுகுமுறைகள் அன்றி வேறென்ன?

இத்தகைய செயற்பாடுகள் எதைத் தெளிவுபடுத்துகிறது என்றால் நாம் மக்களின் பிரச்சனைகளில் இருந்து எவ்வளவுதூரம் விடுபட்டு (பிரதேசரீதியான இடப்பெயற்சிஅல்ல) அன்னியமானசூழலுக்குள் விரும்பியோ, விரும்பாமலோ வந்துள்ளோம் என்பதுதான், இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து இன்றுவரை எவ்வளவோ பிரச்சனைகளைக் கண்டிருக்கறது ஒவ்வொரு பிரச்சனைகளிலும் திருப்தியுறாத எவ்வளவோ மக்கள்திரளை அடையாளம் காணக்கூடியதாகத்தான் இருந்தது அப்படி இருந்தும் இலங்கையில் இடதுசாரிகள் தங்கள் பின்னே ஒருபலமான அணியை திரட்டி ஒருபுரட்சியை முன்னெடுக்கமுடியாது போனதுஏன் ? எப்பவுமே ஒரு 10, 15 பேர் கொண்ட குழுவாக இயங்குவதும் பின்னர் அதில்இருந்து தனிப்பட்ட காரணங்களால் உடைவுகள் ஏற்படுவதும் அதற்குக்கூட இயங்கியல் அது.இது என்று தத்துவமுலாம் பூசுவதும் (வரலாற்றில் தேவைப்பட்ட முறிவுகளை தவறு என்று கருதவில்லை) பின்னர் பிரிந்குழுக்கள் ஆர்வமுடன் இன்னொரு சிறு அணியைச் சேர்ப்பதும் பின்னர் உடைவு அணிசேர்ப்பு என்பதே வரலாறு ஆகி பேரினவாத சக்திகள் புலிகள் போன்ற பாசிசசக்திகளிடம் மக்களின் தலைவிதியை ஒப்படைத்ததுக்கு யார்பொறுப்பு. புறமுரண்பாடுளுடன் அக்கியப்பட்டு வேலை செய்வது, இனங்காணக்கூடிய அக, புறமுரண்பாடுகள் தேசிய, சர்வதேசிய நிலமைகள் என்பவற்றிற்குஏற்ப எமது வியூகங்களை சரியாக வகுத்து மக்களின் விடுதலையை முதன்மைப்படுத்தி வேலை செய்வது போன்ற நடைமுறைகளைக் கைக்கொண்டால் இத்தகைய பின்னடைவுகள் எற்பட்டிருக்குமா? இன்றுவரை வெறும் கற்றுக்குட்டித்தனங்களுக்கும் குறுங்குழு வாதத்திற்கும், வரட்டுத்தனங்களுக்குமே அதிக முக்கியதிதுவம் கொடுத்து செயற்பட்டு வந்துள்ளோம் என்பதை மறைக்க ஏன் தத்துவங்களை துணைக்கழைக்க வேண்டும்.

இக்கட்டுரையில் மார்க்சினதோ, லெனினினதோ, . . . வேறெந்த மார்க்சிச அறிஞர்களது மேற்கோள்களையோ உதாரணங்களையோ தவிர்த்துள்ளேன் இருப்பினும் ரசிய புரட்சிபற்றி அடிக்கடி பேசப்படுவதால் முரண்பாடுகளுடன் ஐக்கியப்பட்டு லெனின் காலத்தில் எப்படி வேலைசெய்தார்கள் என்று குறிப்பிடுவது அவசியமானது. ரசியப்புரட்சியில் பங்குகொண்ட சக்திமிக்க நபர்களாக லெனின், ஸ்டாலின், ரொஸ்க்கி, புகாரின். .ஆகியோர் விளங்கினார்கள் இவர்கள் ஒருமித்த எண்ணங்களையோ, முடிவுகளையோ உடையவர்கள் அல்ல இவர்கள் அனைவரும் தத்துவார்த்தத்துறையில் தமக்கே உரிய தனித்துவத்தைக் கொண்டவர்கள் அதைவிடவும் புரட்சியில் பங்குகொண்ட பல்வேரு நிலைப்பாடுகளுடைய குழுக்கள் இருந்தன. இவர்கள் எப்படி ஒன்றினைந்து வேலைசெய்ய முடிந்தது குறிப்பாக புரட்சியின்போது லெனின்கருத்துக்களில் இருந்துஎவ்வளவு மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தபோதும் ரொச்கி செம்படைக்கு பொறுப்பாக இருந்தார் இத்தகைய நடைமுறை இல்லாது இருந்திருந்தால் ரசியபுரட்சி வெற்றிபெற்றிருக்க முடியுமா? கட்சிக்குள் மாற்றுக்கருத்க்களை லெனின் வரவேற்றார் தொடர்ச்சியான தத்துவார்த்தப் போராட்டங்கள் கட்சிக்குள் நிகழ்ந்தன லெனின் மறைவு வரை இது தொடர்ந்துள்ளது. இத்தகைய அணுகுமுறைகள் எம்மிடம் இல்லாது போனதுஏன். இத்தகைய அணுகுமுறைகளை தவிர்த்து சிறிய சிறிய குழுக்களாக இறுகிப்போவதுதான் சரியான அணுகுமுறையா? முரண்பாடுகளுடன் ஐக்கியப்பட்டு வேலைசெய்யும் நடைமுறையைஎப்போது கைக்கொள்வது.

இன்று எம்முன் எழுந்துள்ள முக்கிய பிரச்சனை ஐக்கியம் பற்றியதாகும் எம்மவர்கள் பல்வேறு குழுக்களாக இருந்தால்என்ன உதிரிகளாக இருந்தால்என்ன தேசிய, சர்வதேசிய மற்றும் தத்துவார்த்த ரீதியிலான பல்வேறு முரண்பாடுகள் இருந்த போதும் அவற்றின் சரியான, தவறான நிலைப்பாடுகளை நடைமுறைப் போராட்டத்தில் புகுத்தி ஆய்வதற்கு தடையாக விளங்கும் முன்னணி பாசிச சக்திகள் புலிகள், துரோகக் குழுக்கள், பேரினவாத அரசு என்பவையே எமது போராட்டம் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராக இருந்த போதும் அதற்கெதிராக போரிடமுடியாதபடி துரத்துவது புலிகளின்பாசிசம். எந்த சக்திகளாக இருந்தாலும் புலிகள் தமிழ் மக்களின் எந்த உயிர்வாழ்வுக்கு போராடுகிறார்கள் என்று கூறி நியாயப் படுத்துகிறார்களோ அதற்காகப் போராடும்வரை மக்கள் எவரையும் எற்கப்போவதில்லை அந்த உயிர்வாழ்வுக்கு போராடும் அதேசமயம் புலிகளின் பாசிசத்திற்கு எதிராகவும் போராட வேண்டும் இந்த இரட்டை போராட்டத்தில் இறங்காதவரையில் நாம் எத்தகைய போராட்டத்தில் இந்த சிறுதுரும்பைத்தானும் அசைத்துவிடமுடியாது. இதைநாம் அக்கியப்படாமல் சாதிக்கவே முடியாது. இன்றைய விவாதங்கள் ஐக்கியம் என்ற

13 ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

← 21

"நீ எல்லாம் அழக்கூடாது. நீங்கதான் வருங்காலத் தூண்கள்"
என்டு கனக்க விசயங்களைச் சொல்லுவாரு.
அவராலதான் நானும் உங்களோட கொஞ்சமாவது கதைக்க முடியுதுங்க. இப்ப அவருக்கு விசாரக்கிட்டுதுங்க.
ஆனா அவரு நடிக்கிறாரு என்டு சொல்லி இவங்க ஓரே அடிதாங்க.

என்னையும் விசாரணைக்கு கூப்பிடுறாங்க.
இன்டைக்கு என்ன பண்ணப்போறாங்களோ! இந்தக் குளிரிலும் இப்பிடி வேர்த்துப் போய்ச்சு. எனக்கு ஏதோ நடுக்கமாகக் கிடக்கு.
என்ர காற்சட்டை நனைஞ்சி போச்சு.
மூத்திரம் போயிட்டுது போல இருக்கே.
எனக்கு போகப் பயமாயிருக்கு. . . .
நீங்களும் என்னோட வாறீங்களா. . . . . . ?

தென்னாபிரிக்காவில் இந்தியர்கள் - இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் எவராயினும் - 'கூலிகள்' என்றே அழைக்கப்படுகிறார்கள். 'கூலி டாக்டர், கூலி லோயர்' என்றே அழைக்கப் படுகிறார்கள். இலங்கையில் 'கூலித்தமிழ்' என்ற நூல் வெளிவந்தது.

நன்றி - குன்றின் குரல்

* * * * * * * * * *

# மேதினம்

உலகத்தொழிலாளர்கள் 16 மணித்தியாலம் 10 மணித்தியாலம் என்றெல்லாம் ஒரு வரையறையற்ற நியந்தனைக்குள் வைத்து முதலாளிகள் தொழிலாளர்களைப் பிழிந்தெடுத்துக் கொண்டிருந்த சமயத்தில் இந்த வேலைப்பளுவைப் போக்கி ஒரு வரையறுக்கப்பட்ட நேரத்துக்குள் கொண்டு வருவதற்காக சிக்காக்கோ நகரில் தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து 8 மணி நேர வேலை என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராடி வந்தார்கள்.

மேலும் பல தொழிற் சங்கங்கள் போராட்டத்தில் இணைய, போராட்டம் உக்கிரம் அடைந்தது. முதலாளிகளும் முதலாளிகளுக்கு சார்பான அரசும் தடுமாறும் அளவுக்கு 1886 ம் ஆண்டு மே மாதம் முதலாம் நாள் அனைத்துச் தொழிற்சங்கங்களும் தொழிற்கட்சிகளும் எரிமலைபோல் கிளர்ந்து எழுந்தார்கள். அதனை அடக்கி ஒடுக்குவதற்கு அரசயந்திரம் தொழிலாளர்மேல் கைவரிசையைக் காட்டியது. இதில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் தமது உயிரைக் கொடுத்து தாம் முன்வைத்த கோரிக்கையை வென்றெடுத்தனர்.

ஆனால் இன்று தொழிலாளர்களை ஒடுக்கும் அரசு அவர்களின் உரிமைகளுக்கு தாங்கள் பாதுகாவலர்கள் என்று மார்தட்டிக்கொண்டு விமரிசையாகக் கொண்டாடுகின்றன. இவ் ஒடுக்குமுறையை புரியாத தொழிலாளர்களும் இத் தினத்தில் பங்குகொள்வதோடு மட்டுமல்லாமல் அத் தலைவர்களைப் புகழ்பாடியும் அவர்கள் தங்கள் நலனுக்கு எதிரானவர்கள் என்று புரியாமலும் அப்பாவித்தனமாக தமது ஆதரவை வழங்கி வருகின்றனர். ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடி வெற்றியீட்டிய இத் தினத்தில் இப்பவுள்ள தொழிலாளர்கள் எப்படி ஒடுக்கப்படுகிறார்கள் என்பதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிக்கவிட்டுக் காட்டி அதற்கெதிரான கோசங்களையோ அல்லது வென்றெடுப்பதற்கான வழிமுறைகளையோ முன்வைக்காமல் நடந்ததையே திரும்பத் திரும்பக் கூறுவதோடு நின்றுவிடுகிறார்கள்.

## சுவிஸில் மேதினம்

### சூரிச்சில் ....

சூரிச் மாநகரில் காலை 10 மணிக்கு மேதின ஊர்வலம் ஆரம்பமானது. அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்கள், வெளிநாட்டவர், உள்நாட்டவர் உட்பட 2000 க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஒவ்வொரு கட்சிகளும் இயக்கங்களும் சுலோக அட்டையுடன் தங்கள் தங்கள் நாட்டுக்கான கோசங்களையும் முன்வைத்தனர்.

இவ் ஊர்வலத்தில் புலிகள் இயக்கத்தினரும், புளொட் இயக்கத்தினரும் தங்கள் தங்கள் ஆதரவாளர்களுடன் கலந்து கொண்டனர். வழமையாக இவ்விரு குழுக்களுக்குமிடையில் ஏற்படும் பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்ட கூட்ட ஏற்பாட்டாளர்கள் முன்பு நடந்த சம்பவங்களை நினைவு கூர்ந்தோ என்னவோ ஊர்வலத்தில் இரு பிரிவுகளாகச் செல்லும் வண்ணம் ஒழுங்கு செய்துவிட்டிருந்தனர்.

புலிகள் இயக்கத்தினர் 'எங்களுடைய தலைவர் பிரபாகரன்', 'எங்களுக்கு தமிழீழம்தான் வேண்டும் ஆகிய கோசங்களையே முன்வைத்துச் சென்றனர். புளொட் இயக்கத்தினர் தமது பழைய பல்லவியே பாடினர்.

மற்றும் பிற்பகல் 2 மணிக்கு சூரிச் நகரில் உள்ள இடதுசாரிகள் தனித்துவமாக மேதின ஊர்வலத்தை நடாத்தினார்கள். இவர்கள் தொழிலாளர்களைச் சுரண்டும் கட்சிகளுடனோ மேதினத்தை களியாட்டு விழாவாக கொண்டாடும் அமைப்புக்களுடனோ இணைந்து செய்யவில்லை. இவர்கள் பொலிசாரின் கெடுபிடிகள் நடுவே தமது ஊர்வலத்தை முன்னெடுத்தார்கள். இவர்கள் ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்பை அதிகளவில் காட்டிக்கொண்டனர். இவ் ஊர்வலத்தில் 200 லிருந்து 250 க்கும் குறையாத மக்கள் கலந்து கொண்டனர். இவர்கள் இங்குள்ள முதலாளித்துவத்தின் சம்பிரதாய பாணிக்குள் அகப்படாமல் ஒருவித போர்க்குணாம்சத்துடன் தமது ஊர்வலத்தை ஒழுங்கமைத்திருந்தனர்.

## பேர்ண் நகரில் ....

பேர்ண் நகரிலும் வழமைபோல் மேதின ஊர்வலம் நடைபெற்றது. சகல அரசியல் கட்சிகளும் அரசு சார்பான தொழிற்சங்கங்களும் கலந்துகொண்டன. மேதின ஊர்வலத்தை சம்பிரதாய பூர்வமாகக் கொண்டாடுவதுபோல் கொண்டாடினர். இம்முறை இங்குள்ள இடதுசாரிகளுடன் துருக்கி இடதுசாரிகளும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. இவர்கள் வருமான வரி உயர்வு, முதலாளித்துவ நெருக்கடிகள் என்பவற்றிற்கு எதிராகவும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் கோசங்களில் முன்வைத்தனர்.

சகல மக்களுக்கும் அழைப்பிதழ் விடப்பட்டும் (தமிழிலும் துண்டுப் பிரசுரமும் வெளியாகியிருந்தது.) விரல்விட்டு எண்ணக்கூடிய தமிழர்கள்தான் கலந்து கொண்டனர். இரத்தத்தால் எழுதிப் பெற்றுக்கொண்ட உரிமைகளை நாமும்தான் அனுபவிக்கிறோம் என்ற நினைப்பாவது எம்மிடம் எஞ்சியிருக்குமா ??

— கபூர்

← 11

எல்லையைத்தாண்டி நடைமுறையைவிட்டு புலிகளிடம், தேசியம் உண்டு இல்லை என்று பூதக்கண்ணாடி வைத்துப்பார்க்கும் நிலைக்கு சென்று கொண்டிருக்கிறது. இயற்கையாக புலிகளுக்குள் ஏதாவது உடைவு வரும்என்று கருதி செயற்படுபவர்களாய் இருந்தால் இந்த இரு கரைகோடிகளிலும் நின்று இன்னும் விவாதிக்கலாம். கடந்த 50வருடங்களாக எப்படி இடதுசாரிகள் இலங்கையில் புரட்சியைக் கோட்டைவிட்டனரோ அதேபோல் நாமும் ஒரு 50 வருடம் குத்தகைக்கு எடுத்து இந்தத்தலைமுறையில் சாதனைபடைக்கவா போகிறோம்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மலையக மக்களும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும்

மலையகமக்களும் இலங்கைத் தொழிலாலர் காங்கிரசும் என்ற இத்தொடர்கட்டுரை சௌதியமுர்த்தி தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரல் மலையகமக்களின் தேசிய இயக்கமா? அதன் தலைவரான தொண்டமான் மலையகமக்களின் உண்மையான தேசியத்தலைவரா? என்பதனை ஆய்வுசெய்வதற்கு முற்படுகின்றது. இதனை முழுமையாக ஆய்வு செய்வதற்கு முதலில் இந்திய வம்சாவளித்தேசியத்தின் தோற்றமும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் உருவாக்கமும் மலையகத் தேசியத்தின் தோற்றமும் எவ்வாறு உருவானது என்பதுபற்றி ஆராய்கின்றது.

**இந்திய வம்சாவளித் தேசியத்தின் தோற்றம்.**

இலங்கையில் சிங்கள பௌத்த தேசிய வாதம் என்பது பிரித்தானியர் ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்திலேயே தோற்றம் பெற்றிருத்தாலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அனாகரிகதர்மபாலாவின் அறிமுகத்துடனேயே சிங்கள பௌத்த பேரினவாதமாக அது எழிச்சி பெற்றது. இப்பேரினவாத எழிச்சி பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு எதிராக திரும்பாமல் சிறுபான்மையினருக்கெதிராகவே திருப்பப்பட்டது. இந்தவகையில் பேரினவாத எழிச்சிக்கு முதலில் பலியானவர்கள் இந்திய வம்சாவளியினரும் முசலிம்களுமேஆவார். அனாகரிக தர்மபால இவர்கள் மீதான எதிர்ப்பை நேரடியாகவே தெரிவித்திருந்தார். அவர் இது தொடர்பில் இந்திய வம்சாவளியினரைவிட முசலீம்களுக்கு எதிராகவே அதிக அளவில் பிரச்சாரங்களை மேற்கொண்டார். 1915இல் அவர் பின்வருமாறு கூறிஇருந்தார்.

"அன்னியரான முகமதியர் சைலொக்கியர் வழிமுறைகளால் யூதர்கள் போன்று செல்வந்தர்களாக மாறினர். 2358 வருடங்களாக அந்நிய முற்றுகையில் இருந்து நாட்டைக் காப்பதற்காக இரத்தத்தை ஆறுபோல் பெருக்கிய மூதாதையரைக் கொண்ட மண்ணின் மைந்தரான சிங்களவர் பிரித்தானியரின் கண்களின் நாடோடிகளாகத் தெரிகின்றனர். தென்இந்திய முகமதியர் இலங்கைக்கு வந்து வியாபாரத்தில் அனுபவமற்ற உதாசீனம் செய்யப்பட்ட கிராம வாசியைக் காண்கின்றான் இதன் விளைவு முகமதியன் முன்னேறுகின்றான். மண்ணின் மைந்தன் பின்தள்ளப்படுகின்றான்."

1915ம்ஆண்டு உருவான சிங்கள- முசலீம் கலவரமும்கூட ஒருவகையில் சிங்கள- பௌத்த பேரினவாதத்தின் எழிச்சியைக்காட்டுவதாகவே அமைந்தது.கண்டியில் ஆரம்பமான இக்கலவரம் பின்னர் நாடெங்கிலும் உள்ள முசலீளுக்கெதிராகவே ஏவிவிடப்பட்டது.

இந்திய வம்சாவளியினருக்கெதிரான இனவாதத்தை அனாகரிக தர்மபால ஆரம்பித்தாலும் அதனை நடைமுறைப்படுத்தியவர்கள் A.E. குணசிங்காவும் ஐ.தே.க தலைவர்களும் ஆவர். A.E. குணசிங்கா இதனை இந்திய வம்சாவளியினரில் ஒருபகுதியாக இருந்த மலையாளத் தொழிலாளருக்கு எதிராக ஏவிவிட்டார். ஐ.தே.க தலைவர்கள் அதனை முழுஇந்திய வம்சாவளியினருக்கு எதிராகவும் வளர்த்து விட்டனர்.

மலையாளிகளுக்கு எதிரான இனவாதம் 1930களில் ஏற்பட்ட பெரும் மந்தத்தை தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைமுதல் விளைவுப் பொருள் உற்பத்தியில் தங்கியிருந்ததினாலும் கொழும்பில் உள்ள தொழிற்சாலைகள் பலவும் முதல் விளைவுத்துறைசார்ந்த தொழிற்சாலைகளாக இருந்தபடியினாலும் இப்பெருமந்தம் இலங்கையையும் பெருமளவு பாதித்தது. பெருந்தோட்டங்கள் பலமுடப்பட்டன. கொழும்பில் உள்ள தொழிற்சாலைகள் பல தமது தொழில் நிலையங்களில் இருந்து ஆக்களைக் குறைத்தன. ஆயிரக்கணக்கான தொழிளாலர்கள் வேலையற்று வீதியில் விடப்பட்டனர். இந்நிலையில் தொழிற்சங்கங்கள் உண்மைநிலையைப் பார்ப்பதற்கு பதிலாக மலையாளத் தொழிளாலர்களினால்தான் சிங்களத் தொழிளாலர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்ற இனவாத கோசத்தை சிங்களத் தொழிளாலர்மத்தியில் பிரச்சாரம் செய்தனர். A.E குணசிங்கா இத்தொடர்பின் முன்னணியில் திகழ்ந்தார். குணசிங்கா குடியெற்ற நாட்டு பொருளாதார முறையை அறிமுகப்படுத்திய பிரித்தானிய அரசுக்கு எதிர்ப்பைக்காட்டுவதற்கு பதிலாக மலையாளத் தொழிளாலருக்கெதிராக அதனைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருப்பிவிட்டார்.

இதைவிட வேலைநிறுத்தக் காலங்களில் குறைந்த கூலிகளில் கருங்காலிகளாக மலையாளத் தொழிளாலர்களை முதலாளிகள் பயன்படுத்தும் நிலையும் இவர்களுக் கெதிரான இனவாதத்தினை தூண்டி இருந்தது. 1929இல் நடைபெற்ற ஏரிக்கரை வேலைநிறுத்தம், 1931இல் நடைபெற்ற கண்டிகுயீன்ல் கொட்டல் வேலைநிறுத்தம், 1933இல் நடைபெற்ற காலிமுகத்திடல் கொட்டல் வேலைநிறுத்தம் என்பவற்றில் வேலைகொள்வோர் வேலை நிறுத்தங்களை முறியடிப்பதற்கு மலையாளத் தொழிளார்களையே பயன்படுத்தினர்.

எ.இ. குணசிங்க மலையாளத் தொழிளாலருக்கு எதிரான இனவாதத்தை சட்டசபைவரை எடுத்துச் சென்றார். 1931இல் புகையிரதப்பகுதியில் நாலாந்தச்சம்பளம் பெறும் 3000 பேரில் 1300பேர் மலையாளிகள் என்றும் அவர்கள் இந்தியாவில் இருந்து வந்து இலங்கைத் தொழிலாளர்களின் வேலைவாய்பினைப் பறிக்கின்றார்கள் என்றும் குற்றம் சாட்டினர்.

குணசிங்க பிரச்சாரத்தோடு மட்டும் நின்றுவிடாது மலையாளிகளுக்கு எதிரான போராட்டத்திற்கும் அவர்களைப் பகிஷ்கரிப்பதற்கும் அறைகூவல் விடுத்திருந்தார். "அகிம்சை முறையில் தர்மயுத்தம் என்றமுறையில் இப்போராட்டத்தை வெற்றிபெறச்செய்யும் முறைகளைநாம் சிந்தித்து கண்டறியவேண்டும். தன் தாய்நாட்டுமனிதனையும் நேசிக்கும் ஒவ்வொருவரும் ஒவ்வொருகிராமத்திலும் உக்கிரமான இயக்கத்தை நடாத்தவேண்டும். மலையாளிகளுடனான தொடர்புகளையும் வணிகத்தையும் நிறுத்தும்படி கோரவேண்டும். மலையாளிகளுக்கு வீடு வாடகைக்கு கொடுப்பதை நிறுத்தும்படி கேக்கவேண்டும். அமைதியானமுறையில் பகிஷ்கரிப்புமூலம் எல்லாத்தொடர்புகளையும் நிறுத்தவேண்டும் இதன் மூலம் எமது கௌரவத்தையும் காக்கவேண்டும்."

குணசிங்காவினது போராட்டமும் பிரச்சாரமும் இலங்கை அரசாங்க சபையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பெரும்பாலான சிங்களத்தலைவர்கள் A.E. குணசிங்காவின் கோரிக்கையை ஏற்று பெருந்தோட்டத்துறை அல்லாததுறைகளிலும் அரசாங்க சேவைகளிலும் இவங்கையர் மயமாக்கலை விரும்பினர். அரசாங்க சேவைத்தொடர்பில் குணசிங்கா 1933இல் அரசாங்க சபையில் சமர்ப்பித்த பிரேரணையை சிங்களத்தலைவர்கள் அங்கிகரித்தனர். " அரசாங்க சேவையில் சேர்வதற்கு இலங்கையர் முன்வருவராயின் இலங்கையரல்லாதோரை சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பது பிரேரணையாகும். அப்பிரேரணையின் அமுல் ஆக்கத்தினால் புதிதாக இந்தியரை சேர்த்துக் கொள்வது தடைசெய்யப்பட்டது. அததோடு ஒரிருவருடங்களில் சேவையில் இருக்கின்ற இந்தியர்களை நீக்கும் முயற்சியும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. இதனால் 1936இல் அரசாங்கத்திணைக்களங்களில் 26வீதமாக இந்தியத்தொகை 1939இல் 19வீதமாக குறைந்தது. 1939ம்ஆண்டு சேர். ஜோன். கொத்தலாவளை தொடர்புத்துறை வேலைகள் அமைச்சராக இருந்தபோது ஒரேதடவையில் 2500இந்தியர்களை வேலைநீக்கம் செய்தார். இதனால் 1943இல் விகிதாசாரம் 12வீதமாகக் குறைந்தது.

இவ் இலங்கையர் மயமாக்கல் ஆரம்பத்தில் அரசசேவையில் உருவாகினாலும் பின்னர் பெருந்தோட்டத்துறை தவிர்ந்த ஏனைய துறைகளுக்கும் பரவலாக்கப்பட்டு அதுதொடர்பான சட்டங்களும் இயற்றப்பட்டன. இந்த வகையில் இலங்கைஅரசினால் உருவாக்கப்பட்ட 3சட்டங்கள் முக்கியத்துவம் வகிந்ததாக விளங்கின.

1.காணிச்சீர்திருத்தச்சட்டம் இல 19 1935
2.மீன்பிடிச்சட்டம் இல 24 1940

3.பேருந்துசேவை அனுமதிப்பத்திரச்சட்டம் இல 47 1942

முதலாவதுச்சட்டமாகிய காணிச்சீர்திருத்தச் சட்டத்தின்படி முடிக்குரியகாணியின் நிலமற்ற விவசாயிகளும் மத்தியதர வகுப்பினரும் சொந்தமாக்கிக் கொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது. ஆனால் அச்சலுகை இலங்கையருக்கேதவிர இந்தியர்களுக்கல்ல எனக்கூறப்பட்டது. 2ஆவது சட்டமாகிய மீன்பிடிச்சட்டம் இலங்கைக்கடலில் இலங்கையர் மட்டுமே மீன்பிடிக்கலாம் என்றும் இலஙங்கையர் அல்லாதவர் மீன்பிடிக்கவிரும்பின் அதற்கான அனுமதிப்பத்திரத்தை பெறவேணடும் எனக் கூறியது. ஆனால் நடைமுறையில் இலங்கையரசு இந்தியர்கள் அனுமதிப்பத்திரம் பெறுவதில் கடும் நிபந்தனைகளை விதித்து அவர்கள் தொழிலில் ஈடுபடுவதை தவிர்த்துவந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3ஆவது சட்டமாகிய பேருந்துச்சேவை அனுமதிப்பத்திரச்சட்டம் ஒரு கம்பனியில் 85வீதமான பங்குகள் இலங்கையருக்குரியதாக இருந்தால் மட்டுமே அதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என்றும் வாகன சேவைக்கு அனுமதிகோரி பல மனுக்கள் அனுப்பப்பட்டால் இலங்கையர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்றும் விதித்தது.

இவ்வாறு ஏனைய பகுதிகளில் இலங்கையர் மயமாக்கம் என்ற பெயரில் இந்தியருக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் பெருந்தோட்டத்துறையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அரசாங்கம் தனது வருமானத்திற்கு பெருந்தோட்டத்துறையையே கூடியஅளவுக்கு நம்பிஇருந்ததாலும் அரசில் ஆதிக்கம் பெற்றதலைவர்கள் பலருக்கு பெருந்தோட்டத்துறை சொந்தமாக இருந்தமையினாலும் இந்தியர்களைவைத்து வேலை வாங்குவதால் கிடைக்கும் பாரிய அளவு இலாபத்தை இழக்கவிரும்பவில்லை. அவர்கள் மேலும்மேலும் இந்தியத் தொழிலாளாலர்களை வருவித்து இலாபத்தைக் கூட்டவே விரும்பினர். இலங்கைஅரசின் இலங்கையர் மயமாக்கல் கொள்கையை எதிர்த்து இந்திய அரசாங்கம் 1939இல் பயிற்றப்படாத தொழிலாளர்வெளியேற்றச் தடைச்சட்டத்தைக் கொண்டுவந்தபோது அதனை நீக்கும்படி 1940இல் டி.எஸ். சேனனாயக்கா தலைமையிலான தூதுக்குழுவினர் இந்தியாவுக்குச் சென்று இந்திய அரசை வேண்டினர். ஆனால் இந்தய அரசாங்கம் இவர்களது கோரிக்கையை நிராகரித்தது.

மேற்கூறியவாறு பெருந்தோட்டத்துறையில் இந்தயர்களுக்கெதிரான நடவடிக்கைகளை எடுக்காதபோதும் அவர்கள் அரசியல் உரிமை பெறுவதை சிங்கள அரசியல் தலைவர்கள் விரும்பவில்லை எந்தவித உரிமைகளும் அற்ற ஓர் அரைகுறை அடிமை நிலையில் வைத்து சுரண்டவே விரும்பினர். இதனாலேயே டொனமூர் அரசியல் சட்டத்தினையே சர்வஜனவாக்குரிமை வழங்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டபோது அதனை காரசாரமாக எதிர்த்தனர். இவ்வாறு எதிர்ப்பதற்கு பல்வேறு காரணிகள் அவர்கள்மீது தாக்கம் செலுத்தி இருந்தாலும் இந்தியர்கள் வாக்குரிமை பெற்றுவிடுவார்கள்என்பது பிரதானகாரணியாக இருந்தது. இது தொடர்பான விவாதம் சட்டசபையில் நடைபெற்றபோது மொலமூரே என்ற உறுப்பினர் " இந்தியர் வாக்குரிமை பெறுவதை எதிர்க்காதவர் தேசத்துரோகிகளாகக் கருதப்படுவர் " என்று பேசியமையும் , மற்றைய உறுப்பினர்களும் இந்தியர்கள் வாக்குரிமை பெறக்கூடாது என்ற தொனியில் ஆற்றிய உரைகளும் இதனையே வெளிப்படுத்துகின்றன. இதன் வளர்ச்சியாகவே 1948ம் ஆண்டு பிரஜாவுரிமைச்சட்டமும் அதனைத்தொடர்ந்து வாக்குரிமைச்சட்டமும் கொண்டுவரப்பட்டது.

இந்தியர் என்ற வகையிலான ஒடுக்குமுறை பேருமளவில் பெருந்தோட்டத்துறைசார்ந்த துறைகளில் மேற்கொள்ளப்படாதது ஏனைய துறைகளிலும் மேற்கொள்ளப்பட்டமையாலும் ஏனையதுறைகளின்மையமாக கொழும்பு தலைநகரம் இருந்தமையாலும் இந்தியத்தேசத்தின் தோற்றம் கொழும்பிலேயே முதன்முதலில் தோற்றம் பெற்றது. கொழும்புத் தலைநகரில் இந்தியர் என்ற வகையில் தொழிலாளிகள், மத்தியதர வர்க்கத்தினர், வர்த்தகர்கள், பெரும்முதலாளிகள் என பல்வேறு பிரிவினர்காணப்பட்டாலும் பெரும் முதளாலிகளே இந்தியதேசியத்திற்கு தலைமைதாங்கி இருந்தார்கள். இவ்இந்திய தேசம் 1920களில் கருநிலையில் உருவானாலும் 1930களின் இறுதியில் ஒடுக்குமுறை உச்சக்கட்டமாக இருந்தபோதே இந்தயத் தேசியத்தை முன்னெடுக்கும் இயக்கமாக அமைப்பு வடிவம் பெற்றது.

இலங்கையர் மயமாக்கும் உச்சமாக நடைபெற்ற 1930களில் இந்தியர்களில் நலன்களைப்பேணுவதற்காக பல்வேறு அமைப்புகள் காணப்பட்டன. அவ் அமைப்புகளில் திரு. எல். தேசாய் தலைமையிலான இலங்கை– இந்தியர் சங்கமும் வள்ளியப்பர் செட்டியார் தலைமையிலான இந்திய சேவா சங்கமும் முக்கியமானவையாகும். இவ்விரு சங்கங்களும் இலங்கையர்மயமாக்கத்தை எதிர்த்து காலிமுகத்திடலில் கூட்டங்களை நடத்தியதோடு இலங்கையர் மயமாக்கல் கொள்கையை வாபசுபெறுமாறும் கோரிஇருந்தன. இக்கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்க மறுத்ததினால் இவ்விரு சங்கங்களும் மகாத்மா காந்திக்கு மனுச்செய்து அவரை இப்பிரச்சனையில் தலையிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டன. காந்தி நேரடியாக வரமுடியாததாய் தனது தூதுவராக நேருவை பிரச்சனையைத்தீர்ப்பதற்காக இலங்கைக்கு அனுப்பினார். நேரு 1939இல் இலங்கைக்கு வந்து இலங்கையர் மயமாக்கத்தைநிறுத்துமாறு இலங்கை அரசை கேட்டபோதும் இலங்கைத்தலைவர்கள் அதற்கு உடன்படவில்லை. இதனால் நேரு இந்தியர்கள் தமது ஒடுக்குமுறைக்கு எதிராக ஒன்றுபட்டு போராடுவதன் மூலமே உரிமைகளை வென்றெடுக்கலாம். அதற்கு இந்தியர்கள் அனைவரும் ஐக்கயப்பட்டு ஒரு அமைப்பை




27 ——>

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தலைவர்களை
## இழந்த
# தென்னாபிரிக்க மக்கள்




கடந்த ஏப்ரல் மாதத்தில் தென்னாபிரிக்க அரசியலில் முக்கிய பங்கெடுத்து வந்த இரு பெரும் தலைவர்களின் இறப்பினால் நாடு சோகமயமானதைக் காணமுடிந்தது. மரணமானவர்களில் ஒருவர் வெள்ளை நிற வெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட தென்னாபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் உயர்மட்டத் தலைவர்களில் ஒருவருமான **கிறிஸ் காணி** (Chris Hani). மற்றவர் ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் ஸ்தாபகர்களில் ஒருவரும் அதன் முக்கிய தலைவருமான **ஒலிவர் தம்போ** (Oliver Tambo)

தென்னாபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான **கிறிஸ் காணி** ஏப்ரல் மாதம் 10ம் தேதி தமது வீட்டிற்கு அருகில் வைத்து ஆயுதம் தாங்கிய வெள்ளை நிற வெறியர்களினால் படுகொலை செய்யப்பட்டார். இவரது படுகொலையை அடுத்து தென்னாபிரிக்காவின் பல்வேறு பகுதிகளில் வெள்ளையர்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் வன்செயல்களும் இடம்பெற்றன. கறுப்பின விடுதலைப் போராட்டக் குழுக்களால் சில வெள்ளையர்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

கிறிஸ் காணியின் படுகொலையைக் கண்டித்து ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்தை அறிவித்திருந்தது. இவரது இறுதி அஞ்சலியின்போது யோகானிஸ்பேர்க் உதைபந்தாட்ட மைதானம் கொள்ளாதளவுக்கு மக்கள் கலந்து கொண்டது சர்வதேச கவனத்தை ஈர்த்தது. இவரது மரணத்தையொட்டி கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி கறுப்பு நிற வெறியும் கம்யூனிச எதிர்ப்பும் கொண்ட புதிய நாசிகளே இப் படுகொலையைச் செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அடுத்தவர் **ஒலிவர் தம்போ.** தனது 75 வது வயதில் இருதய நோயால் மரணமானார். விவசாயக் குடும்பம் ஒன்றில் பிறந்த இவர் பாதிரியாராகத் தனது கல்வியைத் தொடங்கி பின்னர் அரசியலின்பால் ஈர்க்கப்பட்டார். நெல்சன் மண்டேலாவின் தொடர்பின்மூலம் அவருடன் இணைந்து 1944 இல் ஆபிரிக்கத் தேசிய காங்கிரசை நிறுவினார். இவர்களின் மூலமாகவே முதன்முதலில் கறுப்பினத்தவர்களுக்கான வழக்கறிஞர்கள் அமைப்பு நிறுவப்பட்டது.

50 வருடங்களாக கட்சியின் பொதுச் செயலாளராகவும் உதவித் தலைவராகவும் செயற்பட்டார். ஒலிவர் தம்போ. ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் 60 இலும் 62 இலும் இரு தடவைகள் வெள்ளை நிறவெறி அரசால் தடை செய்யப்பட்டு, மண்டேலாவும் கைதுசெய்யப்பட்டபோது ஸாம்பியா, பொஸ்வானா, தன்சானியா போன்ற நாடுகளில்

*******************

***வரதன்***

*******************

தலைமறைவாக இருந்து, தேசிய காங்கிரசை ஒரு கெரில்லா இயக்கமாக வளர்த்தெடுப்பதில் முக்கிய பங்காற்றினார்.

1967 இல் இடம்பெற்ற சதியின் மூலம் கட்சியின் எட்டு முக்கிய உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டதுடன் கட்சியின்


37 →
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை :

# சந்தேகி

– நிகரேஷ்

இருளுக்குக்கும் அந்தச் செங்கதிர்களுக்குமிடையில் போராட்டம் நடந்தது. உனது ஆதிக்கம் முடிந்துவிட்டது. 'நீ போ, இனி எனது ஆதிக்கம்தான்' எனக் கூறிய கதிரவன் செம்மஞ்சள் கதிர்களை இருளின்மேல் பாய்ச்ச . . .
'உனது ஆதிக்கம் இன்னும் எவ்வளவு நேரம், நான் மீண்டும் வருவேன்' எனக் கூறி . . . இருள் ஓடி மறைந்தது.
கதிரவன் வரத்தான் எல்லோருக்கும் விடியும். ஆனால் எமக்கு கதிரவன் வருவதும் தெரியாது போவதும் தெரியாது. எமக்கும் விடியும், ஆனால் அது எப்போ? சிலவேளை எமது பிணங்களின் மேலாகவும் இருக்கலாம்.



பல நாட்களுக்குப் பிறகு இன்றுதான் வெளியுலகைப் பார்க்கிறேன். அதுவும் எவ்வளவு நேரமோ? இன்னும் மூன்று பேர்கள் இருக்கிறார்கள்.
என்ன இது? போகும்போது நடந்து சென்றவள். வரும்போது இருவர் இழுத்து வருகிறார்கள்.

இது உங்களுக்கு அதிசயமாகத்தான் இருக்கலாம். ஆனால் எமக்கு பழகிவிட்டது. நானும் இப்படித்தான் இருமுறை போய்வந்தேன். இன்று எப்படியோ? முதல் முறை இருந்த பய உணர்வு ஏனோ இன்று எனக்கு இல்லை. எனது மரத்துவிட்ட இதயத்திற்கும், உணர்வு வந்துவிட்ட உடம்பிற்கும். இப்பொழுது இவைகள் யாவும் சாதாரண வாழ்வாகிவிட்டது.

சாப்பாடு வரும்பொழுது காணவேண்டியதுதான். எதிரியின் தாக்குதல் அதிகமாக இருந்தால் அன்று நோன்புதான். கிழிந்துபோன கந்தல்கள் மாதிரியுள்ள எமது உடம்பைப் பார்க்க யானைக்குட்டி போல் சிலர் வருவார்கள். வரும்போது மூக்கையும் பொத்திக்கொண்டுதான் வருவார்கள். அந்தளவுக்கு நாம் சுகாதார வசதிகளோடிருக்கிறோம்.

ஏன் ஐயா, எங்கட உடம்பைப் பார்த்தால் தப்பிஓடக்கூடிய மாதிரியா இருக்கு. எங்களுக்கு பாதுகாப்பைப் பார்த்தீங்களா? ஒண்டில்லை, இரண்டில்லை ஐந்து சுத்து முள்ளுக் கம்பி வேலி. அதுக்கும் வெளியிலை கண்ணிவெடியிருக்கு.
சரி காக்கா. எங்களை திறந்து விட்டிருந்தால் இந்த பாதுகாப்பு வேணும். ஆனால் எங்களை நிலத்திற்கு கீழேயும், சின்னச் சின்ன நாய்க் கூட்டுக்கையும் எல்லா போட்டு பூட்டிவைக்கிறாங்க.

ஏன் ஐயா, எங்களுக்கு இவ்வளவு பாதுகாப்பு? நாங்கள் என்ன கொலைகள் செய்தமா? அல்லது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோள்ளையடிச்சமா? இல்லாட்டி அப்ப இங்க ஏன் இருக்கிறம் தெரியுமா?
இங்கு இருக்கிற கனபேர் இவங்களைப் பற்றிக் கதைச்சாங்க. சில பேர் வேறையாட்களோட ஆயுதம் தூக்கினாங்கள். ஒருசில முஸ்லிம் வியாபாரிகளும் இருக்கிறாங்க.

அப்ப நான் ஏன் உள்ளை இருக்கிறேன் என்று யோசிக்கிறீங்களா?
நான் சொல்லுறதை தப்பா நினைக்காதீங்க. நான் ஒரு கலப்படம் ஐயா. கலப்படம் என்டோன்ணா எப்பிடி நினைச்சிருப்பீங்க என்டு எனக்கு தெரியும். நான் சொல்லுறது, அந்தக் கலப்படம் இல்லை. எங்க அப்பாவும் உம்மாவும் என்னைக் கலப்படமா பெத்தெடுத்துப் போட்டாங்களாம்.
அது என் தப்பா?
அதுக்குத்தான் இங்க இருக்கிறன். பொறுங்கோ ஐயா. இன்டைக்கு ஏதோ மாவீரர் நாளாம். தேத்தண்ணி கொடுக்கிறாங்க. கனகாலம் தேத்தண்ணி குடிச்சு. தேத்தண்ணியை குடிச்சா தெம்பா நடந்ததைச் சொல்லலாம்தானே. ஒவ்வொரு மாதத்திலையும் ஒவ்வொரு கிழமையும் மாவீரர் நாளைக் கொண்டாடினால் நல்லது. கொஞ்சத் தேத்தண்ணியாவது குடிக்கலாம்தானே.
ஆனா மாவீரர் நாள் என்றால் வெளியால இருக்கிறவங்களுக்குத்தான் கஸ்ரங்கள். அதை நான் சொல்ல வேணுமா? உங்களுக்குத் தெரியுமதானே.

ஆமா சேரு, அப்பா சைவம். பேரு சிவகுருவன்னா. உம்மா பேரு பாத்திமா. உம்மா முஸ்லிம். இரண்டு பேரும் காதலிச்சு கலியாணம் கட்டினாங்களாம். எனக்கு ஒரு நல்ல பெயரை வச்சாங்களா? இல்லை.
என்ர பெயர் என்ன தெரியுமா? அகமட்கண்ணா.

நாங்க சேரு, சைவசமயக் கொண்டாட்டமும் கொண்டாடுவம், முஸ்லிம் சமயக் கொண்டாட்டமும் கொண்டாடுவம். நான் பள்ளிக்கூடத்தில் படிக்கிறது சைவசமயம். வீட்டிலை உம்மா முஸ்லிம் மதத்தைப் பற்றிச் சொல்லித் தருவா.
ஒரு முக்கிய விசயம் சொல்லனும். அப்பா சுத்த சைவம் சேரு. அவர் அடிக்கடி விரதம் விரதம் என்று இருப்பாரு. உம்மா மரக்கறிதான் சமைப்பா. அதுமட்டும் இல்லை. உம்மாவும் விரதம் பிடிப்பா. பிறகு உம்மாவும் அப்பாவும் நோன்பிருப்பாங்க.

சாரு, நான் அப்பாகிட்ட அடிக்கடி கேப்பன்
'நீங்க எந்த மதம்? எந்தச் சாமியைக் கும்பிடுவீங்க?' என்று.
அப்பா சொல்லுவாரு "அல்லா என்டாலும் சரி, முருகன் என்டாலும் சரி, ஜேசு என்டாலும் சரி, எல்லாம் ஒரு கடவுள்தான். ஆனா பேரு மாத்திரம் தான் வேற. "
அப்பா பிறகு கேட்பார் "என்டா அகமட் எல்லா ஆறுகளுக்கும் ஒவ்வொரு பெயர்கள் இருக்கு ஆனா அவை கடைசியா எங்க போய்ச்சேருது?"
நான் சொல்லுவன் "கடலிலைதான் என்டு"
அதுமாதிரித்தான் மதங்கள் எல்லாம் பல வழியில் போய் ஓர் இடத்தில் சேருது. அதனாலை யாரும் எந்தக் கடவுளையும் கும்பிடலாம்.
அப்ப உம்மாவும் அதுக்கேத்தமாதிரி தலையாட்டிக் கொண்டிருக்கும்.

ஆனா எங்களுக்கு பள்ளிக்கூடத்திலை டேவிட் அண்ணை அடிக்கடி சொல்லுவாரு, "மதங்கள் எங்களை மந்தைகளாக்கிறது" என்டு. இதுகள் ஒன்டும் எனக்கு விளங்கமாட்டுது. விட்டிடுவன்.

ஒருநாள் சேரு, அப்பா கடையிலை இருக்கேக்க கோட்டையிலை இருந்து வந்த குண்டு ஒன்டு அப்பாவின்ரை கால் ஒன்றைக்கொண்டு போட்டுது. அதை நினைக்க இப்பவும் எனக்கு அழுகை தான் வரும். என்ன செய்ய, அவன் பெரிய எதிரியாச்சே. அவன் அடிக்கிறான். கேக்கிறதுக்கு யாரு இருக்கா? இயக்கங்கள் மட்டும்தான் இருந்திச்சு.

அப்ப நம்ம தெருவிலை இருந்து கனபேர் இயக்கத்துக்கு போட்டாங்கள். இயக்கம் வந்து காசு கேட்டா 'நம்ம பெடியள்தானே' என்டுட்டு நம்ம தெருவிலை இருக்கிற எல்லாரும் அள்ளிக் கொடுப்பாங்க.
ஆனா அது ஏன் சேரு! உந்த இந்தியனாமி வந்திருக்கேக்க எங்களை உள்ளுக்கு வைச்சிருக்கிறாங்களே இவங்களுக்கு சாப்பாடு, பாதுகாப்பு எல்லாம் நாங்கதான்.
பிறகு இந்தியன் ஆமி போட்டாங்க. இவங்க


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆட்சிதான். பிறகு நம்ம எதிரியோட சண்டையும் தொடங்கிற்றுது.
ஒருநாள் இரவு 'வானிலை' வந்து நம்ம தெருவிலை தொப்தொப்பென்று எல்லாரும் AK47 ஓடை குதிச்சு ஆங்காங்கே படுத்தாங்க. ஒருத்தன் எங்கட வீட்டுக்கு வந்து ஒரு மாதிரியான குரல்லை
"எங்கட தலைமைப்பீடம் ஒரு கட்டளை போட்டிருக்கு. உங்கள் எல்லாரையும் இங்கிருந்து வெளியேறச் சொல்லி. அதுதான் ஒவ்வொரு வீடுகளிலையும் சொல்லிக் கொண்டுவாறம். நீங்கள் இன்னும் 24 மணித்தியாலத்துக்குள்ளே வெளியேறி விடோணும்" இது எங்கட இயக்கத்தின்ரை கட்டளை.

அப்பாவின் கன்னு பழுத்த மிளகாய் மாதிரி சிவந்திரிச்சு. மழைபெய்யும் முன்னம் இருட்டுற மாதிரி அப்பான்ர முகம் கறுத்துப்போச்சு. அப்பாவின்ரை வாய் எதையோ சொல்லுது. ஆனா சத்தம் வெளியே வரமாட்டேன்றுது உம்மாவைப் பார்த்தால் அழுதுகிட்டு இருக்கிறாங்க. எனக்கு ஒன்றுமே புரியேல்லை.
நான் சொன்னேன் "சரிசரி நாங்க அப்பம்மா வீட்டுக்குப் போறம், நீங்க போங்க."

வந்தவன் ஏதோ நான் சொன்னதிற்கு சிரித்துக் கொண்டு "சிவான்னை, எனக்கு உங்களைப் பற்றித் தெரியும். இங்க ஒருத்தரும் துரோகியில்லை. ஆனா தலைமை சொல்லுது, உங்கட சனம் எல்லாத்தையும் துரத்தச் சொல்லி. நாங்க என்ன செய்ய முடியும். சொன்னதைச் செய்ய வேண்டியதுதான் எங்கட கடமை. ஆனால் எங்களுக்கும் மனச்சாட்சியிருக்கு. . . .
அதுவும் படிப்படியா செத்துக்கொண்டு போகுது. . . .
சிவான்னை, பார்த்திமா அக்கா இங்கிருந்து உடனை போகோணும். நீங்க உங்கட அம்மாவோடை இருக்கலாம்தானே. ஆனா அகமட்டும் இங்கிருக்கிறது நல்லதில்லை. அவனும் பார்த்திமா அக்காவோடை போறது நல்லது.
நான் இப்பிடி எல்லாம் உங்களோட கதைச்சனான் என்டு இயக்கத்துக்குத் தெரிந்தால் . . . . "

அவன் போட்டான். அப்பாவும் உம்மாவும் என்னைப் பார்த்து அழுதழுது யோசிக்கிறாங்க. எனக்கு ஒன்டுமே விளங்கல்லை. அவங்களைப் பார்க்க எனக்கு அழுகை அழுகையா வந்திச்சு. நான் ஓ. . . என்டு அழ, உம்மா என்னை தன்ரை மடியிலை தூக்கிவைச்சு
"டேய் கண்ணா, நீ அழாதடா. நானும் நீயும் நாளைக்கு பெரிய நானா வூட்டுக்கு போவம். அப்பா இங்க அப்பம்மாவோட இருக்கட்டும்"

எனக்கு ஏன் என்னத்திற்கு என ஒன்டுமே சரியாப் புரியலை. நான் 'ஓம்' என்டு தலையாட்ட. . . . .
"இல்லை பார்த்திமா, அகமட்டை நீ ஏறாவூருக்கு கூட்டிக்கொண்டு போகவேண்டாம். அங்க இவனுக்கு பிரச்சினையாய் இருக்கும். இவன்ரை பழக்க வழக்கம் நடைஉடை எல்லாம் வித்தியாசம். பிறகு அவங்க ஊர்காவல் படையோ அல்லது ஜிகாத்தோ பிடிச்சுக்கொண்டு போய்ச்சென்டால் நாம ஒன்டும் செய்ய முடியாது. "
என தடதடத்த குரலில் சொல்லி அழுறார்.

ஏன் இவங்க அழுறாங்க நான் ஒரு நாளுமே உம்மாவும் அப்பாவும் அழுததைப் பார்க்கலே. நான் ஓடிப்போய் அப்பம்மாவைக் கூட்டிக் கொண்டு வந்தன். பிறகு மூன்று பேரும் சேர்ந்து அழுதாங்க.
அப்பம்மா என்னைப் பார்த்து. . . . "அகமட் நீ என்னோட இருக்கிறியா" என்டு அழுது கேட்டுச்சு
"அப்பம்மா நீ என்கூடப் படுப்பியா? சொக்கலேட்டு வாங்கித் தருவியா? அப்பிடியென்டா உன்கூட இருப்பன். "
அப்பம்மா என்ர நெத்தியிலை கொஞ்சிற்று.
"நீ என்ர பிள்ளை தானேடா உனக்கு நான் எல்லாம் வாங்கித்தாறேன். என்னோட இரு. "
"பார்த்திமா நீ போறதிற்கு ஆயத்தப்படுத்து. "
என்டு சொல்லிக் கொண்டே என்னைப் பிடிச்சு அழுதாரு. அழுதழுது அப்பான்ர சேட் எல்லாம் நனைஞ்சு போச்சு. அப்பாவைப் பார்க்கவே பாவமா இருந்திச்சு. நான் அப்பாவின்ர மடியிலையே. . .
விடிய எழும்பி பார்த்தா உம்மாவ காணல்ல. என்னோட விளையாட ஒருத்தரையுமே காணேல்ல. எங்கட தெருவில யாருமேயில்லை.
கொஞ்ச நாய்கள் நின்டு சண்டைபோடுதுகள்.
நான் அப்பாகிட்டப் போய். . . .
"அப்பா! உம்மா, நசீர் அங்கிள், அப்துல்லா நானா எல்லாம் எங்க போட்டாங்க. "



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்பா கதைக்கவேயில்லை. எதையோ பார்த்துக்கொண்டு இருந்தாரு. எனக்கு அழுகை வந்திருச்சு. நான் அழுதுகிட்டிருக்க. . . . . . ராத்திரி வந்த அந்த சிடுமூஞ்சி வந்து
"அகமட் நீ போகைல்லையே?"

அதுக்குள்ள அப்பம்மா வந்து சொன்னா,
"இல்லை, அவன் எங்ககூடத்தான் இருக்கப்போறான். நீதான் நல்ல வழிசெய்ய வேணும்"
என்டு சொல்லி அந்தச் சிடுமூஞ்சி முன் அழுதது.
"பார்வதியம்மா! நான் இங்க இருக்கும் வரைக்கும் அகமட்டுக்கு ஒரு பிரச்சினையும் வராது. நீங்க அழாதேங்கோ" என்டுட்டு,
அப்பாட்டை ஏதோ கேட்டான்.
அப்பா பேசவேயில்லை. கிட்டப்போய் அவரின் உடம்பை உலுக்கிக் கேட்டான். அவர் அப்படியே விழுந்திட்டார்.
அப்பம்மா "என்ர ராசா போயிட்டியோடா" என்டு கத்துது.

நான் அந்த சிடுமூஞ்சியிட்ட கேட்டன்,
"ஏன் அப்பாவைத் தள்ளி விழுத்தினி? அப்பம்மா ஏன் அழுவுது?"
அவன் கண்ணைக் கசக்கிக்கொண்டு "சிவாண்ணை செத்துப்போயிட்டாரு. . . . . " என்றான்.
பிறகு எனக்கு என்ன நடந்ததென்டு தெரியாது.

நான் பெரியாசுப்பத்திரியிலை படுத்திருக்கயிக்கை பக்கத்திலையிருந்து அப்பம்மாஅழுவுது. ஏன் அழுவுறஎன்டா.
"உங்க உம்மாவும் போட்டா" என்டு விக்கி விக்கி அழுவுது.
எனக்கு என்ன செய்யிறது என்டு தெரியல்லை. என்னாலை அழவே முடியல்லை. அவ்வளவு சுகமில்லை.
நான் கொஞ்ச நாளைக்குப் பிறகு வீட்டை வந்திட்டன். அப்பம்மா சொல்லிச்சு,
"நீ பள்ளிக்கூடம் போகலாம்தானே" என்று.
எனக்கு மனசு சரியில்லை. நான் எப்பிடி போறது.
அப்பம்மா அழுதுகிட்டு சொல்லுதென்டுட்டு நான் பள்ளிக்கூடம் போய்வரத் தொடங்கினன். ஒரு நாள் பள்ளியாலை வரேக்க என்னைப் பிடிச்சுக்கிட்டு வந்திட்டாங்க. பாவம் அப்பம்மா எங்கேங்க தேடுதோ தெரியாது. எனக்குத் தெரியும், அது அழுதுகொண்டுதான் இருக்கும்.

"ஏன் சேகு! நான் துரோகியா? நானும் தமிழன்தான். நாங்களும் எல்லா இயக்கத்திற்கும் எவ்வளவு உதவி செய்தனாங்கள். உம்மான்ர ஆக்கள் எல்லாரும் முஸ்லிம்தான். ஆனா அவங்க மதத்தாலையும் கலாச்சாரத்தாலையும் கொஞ்ச வித்தியாசம்தான். அவன்களும் தமிழங்கதானே. அவங்களுக்கும் தமிழ் உணர்வு இருக்கும். ஆரோ ஒரு முஸ்லிம் காட்டிக்கொடுத்தான் என்டு எவ்வளவு காலமா இருந்த எல்லாரையும் கலைச்சுப் போட்டாங்க. அப்பிடியென்டா. . .

உங்க மற்ற இயக்கங்கள் எவ்வளவு துரோகம் செய்யினம். எதிரியட்டை ஆயுதத்தை வாங்கி எங்கட தமிழாக்களைத்தானே சுடினம். அவங்கள்தானே முதல்ல தமிழினத் துரோகிகள். அப்ப இவங்கன்ர இயக்கம் இல்லாத மற்றவங்க எல்லாரையும் விட்டுக் கலைக்கனும். இல்லை.
நீங்களே யோசிச்சுப்பாருங்கோ. இவையள் அம்மான்ர ஆட்களைக் கலைச்சது சரியோ? கலைச்சதால அப்பாவும் போட்டா. உம்மாவும் போட்டா. நானும் என்னைப்போல இன்னும் எத்தனைபேர். . . . . எங்கெங்கு இருக்கினமோ தெரியாது.

நான் உம்மான்ட ஆக்களிட்டையும் போகேல்லாம அங்கை 'ஜிகாத்' நிற்குது. அவங்களும் தமிழங்கதான். ஏன் இப்பிடி செய்யிறாங்க? என்டு எனக்கு தெரியல்லை.
இங்க எங்கட அம்மாக்கள்ன்ர ஆட்களை கலைக்க. . . . .
அங்க அவங்க அப்பான்ர ஆக்களைக் கலைக்க. . . . .
இப்படிப்பட்டஆட்களை பார்க்க எனக்குப் பிடிக்கவே இல்லை.

உங்க பார்திங்களா சேகு!
ஒரு அன்னை தன்பாட்டிலை இருந்து கதைக்கிறாரு. அவரை முந்தி என்ர கூண்டுக்குப் பக்கத்திலைதான் வைச்சிருந்தாங்கா. அப்ப, நானு அழுதா



12 ——>

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிக்கரக்குவா


# புரட்சியின் பின் ......

**************************************************

**Race & class (1991) புத்தகத்தில் Hazel Smith என்பவர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. Hazel smith, University of Kent இன் லண்டன் சர்வதேச தொடர்பு மையம் (London International Relations Centre) இல் விரிவுரையாளராக இருப்பவர்.**

**நிக்கரகுவா புரட்சியின்பின் போர்க் கொடுமைகளினூடு புரட்சியின் பெறுபேறுகளைப் பாதுகாக்க FSLN எடுத்த ராஜதந்திர நடவடிக்கைகளையும் அதன் விளைவுகளையும் இக் கட்டுரை தனது உள்ளடக்கமாக்கியிருக்கிறது.**

********************************************************************



♣♣♣♣♣♣♣♣♣♣♣

**தமிழில் — தேவா**

♣♣♣♣♣♣♣♣♣♣♣

***தேர்தலில் தோல்வியுற்றதனால் புரட்சியில் தோற்றுவிட்டோம் என்று அர்த்தமல்ல***
*— அலெக்சான்டர் பென்டானா.*

***தேசிய, சர்வதேச மட்டத்தில் ஒரு புத்திசாதுரியமானதும் நடைமுறைக்குகந்ததுமான அணிசேரல் கொள்கையின்றி எங்கள் புரட்சி நிச்சயமாக வெற்றியீட்டியிருக்க முடியாது***
*— கும்பேட்டா ஓட்டேகா*

**1990** இல் உலகளவில் பெரிதும் கவனத்தை ஈர்த்த நிக்கரகுவாவின் பொதுத்தேர்தலில் சமோராவின் தலைமையிலான UNO (தேசிய எதிர்க்கட்சிகளின் கூட்டணி) வெற்றி பெற்றது. 1979 இல் புரட்சி வெற்றி பெற்ற காலத்திலிருந்து தொடர்ந்து பதவியிலிருந்து வந்த சன்டினிஸ்டா (FSLN) அரசு தங்களை மீளாய்வு செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டது.

சர்வாதிகாரி சோமோசாவை புரட்சியின்மூலம் முறியடித்த FSLN ஆனது அரசியல், சமூக, பொருளாதார, இராணுவ மட்டங்களில் நிக்கரகுவாவில் ஏற்படுத்திய மாற்றங்கள் மறுப்பதற்கில்லை. மக்களும் அதனை தேர்தல் மூலம் நிராகரிக்கவில்லை. UNO அரசு 'அமெரிக்க சார்பு' என்பதால், போர் ஒரு முடிவுக்கு வரலாம் எனவும், அமெரிக்க உதவியுடன் பொருளாதாரத்தை அரசு சீர்படுத்தி கட்டியெழுப்பலாம் எனவும் எதிர்பார்த்து மக்கள் வாக்களித்தனர். அத்தோடு FSLN அரசின் கட்டாய இராணுவ சேவையும் FSLN இன் தோல்விக்கு காரணமாக அமைந்தது என்பதை FSLN கண்டு கொண்டது.

ஆனாலும், சமோரா வெற்றி பெற்றால் 300 மில்லியன் டொலரை நிக்கரகுவாவிற்கு உதவியாக வழங்குவதாக அறிவித்த அமெரிக்காவோ இன்றுவரை அதை வழங்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தேர்தல் வெற்றியைப் பொறுத்தவரை UNO அரசு அதிக பெரும்பான்மையைப் பெற்றிருக்கவில்லை. 90இல் 56 பிரதிநிதித்துவத்தையே அது பெற்றிருந்தது. இதனால் FSLN 1987 இல் அரசியலமைப்புச் சட்டத்தில் கொண்டுவந்த பாரிய மாற்றமெதையும் பலமிழக்கச்செய்ய முடியாத நிலையில் UNO அரசு உள்ளது. 1987 இன் அரசியல் அமைப்பு திருத்தம் புரட்சியின் பெறுபேறுகளை உள்ளடக்கியதாகும். இத் திருத்தத்தின் பலனாக இலவசக் கல்வி, இலவச வைத்தியசேவை என்பனவும் வாக்களிக்கவும் மற்றும் தங்களை அணிசேர்த்துக் கொள்ளவுமான அரசியல் உரிமைகளும் மக்களை வந்தடைந்தன.

FSLN மக்கள் மத்தியில் செல்வாக்கையோ பலத்தையோ இழந்து விடவில்லை பத்துவருட காலம் தொடர்ந்த போரில் மக்கள் யுத்தக்களையில் வாடினர். நிக்கரகுவாவின் மீதான அடாவடித்தனத்திற்கு அமெரிக்கா எந்தளவுக்கு குற்றஞ்சாட்டப்பட்டதோ, அந்தளவுக்கு FSLN உம் அதனது கொள்கைப் பிழைக்காக விமர்சிக்கப்பட்டதும்கூட உண்டு. இருந்தும் இவை எல்லாவற்றிற்குமூடாக தேர்தலில் FSLN 42 வீத வாக்குகளைப் பெற்றது. 31 மாநகரத் தேர்தல்களில் வெற்றிபெற்றதுடன் 80 வீத தொழிலாளர்களை சான்டினிஸ்ரா தொழிளாளர் யூனியனின் கீழ் (FNT) தொடர்ந்தும் அணிசேர்த்துள்ளது.

## புரட்சியின் இரண்டாவது கட்டம்

தமது தேர்தல் தோல்வியினைத் தொடர்ந்து, நிக்கரகுவாவின் முன்னாள் வெளிநாட்டமைச்சகத்தின் செயலாளர் பென்டானா FSLN உம் புரட்சியும் 'இரண்டாம் கட்டத்தினை' எட்டியுள்ளதென்றார். FSLN பதவியிலிருந்த காலத்தை முதலாம் கட்டமாகக் குறிப்பிடும் அவர், இரண்டாம் கட்டம் சமோசாவின் வெற்றியுடன் ஆரம்பிக்கிறது என்றார்.

உண்மையில் FSLN ஆட்சியில் இல்லாவிடினும் சமூகத்தில் மேலாண்மையை அது இழந்துவிடவில்லை. தாம் அமைப்புரீதியில் செயற்படவும், அதன்மூலம் தங்களது கோரிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவும், தமது உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்கவும் புரட்சியினூடாகக் கற்றுக்கொண்ட மக்கள் பிரிவினருடன் FSLN இணைந்து செயற்பட்டது. இச் செயற்பாடு ஏற்கனவே வெற்றியைச் சாதித்துமுள்ளது. UNO அரசுக்கெதிரான இரண்டு பொது வேலைநிறுத்தங்களை தொழிலாளர்கள் அமைப்புரீதியில் நடாத்தினார்கள். இதன்மூலம், தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை குறைக்கவல்ல இரு பிரேரணைகளை அரசு வாபஸ்பெற வைத்தனர்.

இந்த இரண்டாவது கட்டம் FSLN தன்னை ஜனநாயகப்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளியுள்ளது. சர்வாதிகாரி சொமோசாவைத் தோற்கடிப்பதில் வெற்றிகண்ட இராணுவ, அரசியல் கட்டமைப்பிலிருந்து தேர்தலை அடிப்படையாகவும் கொண்ட அரசியல் கட்சியாக மாறவேண்டிய தேவையையும் இது உள்ளடக்கியுள்ளது. இன்றுவரை இதையொட்டிய விவாதங்கள் பொதுஜன தொடர்பு சாதனங்களிலும் கட்சியினுள்ளும் தீவிரமாக – சிலவேளைகளில் உணர்ச்சிக் கொந்தளிப்பாகவும்– நடந்து கொண்டிருந்தாலும் எவ்வாறு இந்த மாற்றத்தினை கொண்டுவருவதென்ற முடிவுக்கு வரமுடியவில்லை. FSLN காலத்தின் தேவையை ஒட்டி தன் கட்டமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதில் கட்சியினுள் உடன்பாடு காணப்படினும், தொக்கிநிற்கும் வினா 'எவ்வாறு?' என்பதுதான் !



1996 இல் மீண்டும் FSLN பொதுத்தேர்தலை சந்திக்கப் போகிறது. இதற்கான தேர்தல் நடவடிக்கை கட்சிக்கு ஒரு பிரச்சினையாகவே அமையும் என்பது பென்டானாவின் கருத்து. ஏனெனில் FSLN தேர்தலை மட்டும் அடிப்படையாகக் கொண்ட –வழமையான– அரசியல் கட்சியல்ல. மேலும் தேர்தலில் வெற்றி பெறுவது FSLN இன் நோக்காக இருந்தால், ஒரு கசப்பான உண்மையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் இங்கு அமெரிக்காவின் தலையீடு மிக முக்கியமானதொன்றாக உள்ளது. FSLN இன் தேர்தல் வெற்றி இன்னுமொரு பத்துவருட போரை கொண்டுவரப்போகிறதென நிக்கரகுவா மக்கள் கருதுவார்களேயானால், மக்கள் இந்த வெற்றியை வரவேற்க மாட்டார்கள்.

" சிலவேளை எங்களுக்கு ஒரு 'ஜங்கிஸ்ரோயிக்கா' (YANKEESTROIKA) மத்திய அமெரிக்காவில் தேவைப்படலாம் "

என்கிறார் பென்டானா.

www.tamilarangam.net

FSLN புரட்சி பற்றிய தமது மீளாய்வை விரிவான அடிப்படையில் மேற்கொண்டனர். புரட்சிக் காலகட்டங்களில் நடந்தேறிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்களையும், அம் மாற்றங்களுக்கு தோற்றுவாயாக அமைந்த சர்வதேச நிலைமைகளையும் தொடர்புபடுத்தி ஆய்வுசெய்தனர். அமெரிக்காவுடன் கொண்டிருந்த உறவுநிலை பற்றியும் ஏகாதிபத்திய சக்திகள் பற்றியும் இவ் ஆய்வில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. பென்டானாவின் கூற்றுப்படி, FSLN ஆட்சிக்கு வந்தபோது தேசிய, சர்வதேச ரீதியில் பரந்தளவில் செல்வாக்குப் பெற்றிருந்ததோடு தமக்கு சாதகமான நிலைமைகளையும் கொண்டிருந்தது. இதன் அடிப்படையில் FSLN 1979 அரசியல் புரட்சியிலிருந்து மிகவேகமாக நிக்கரகுவாவின் சமூக, பொருளாதார புரட்சியினை எடுத்துச் செல்லமுடியும் என மதிப்பிட்டது.

" ஆனால் நாங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளாததும், எங்களால் கணிக்க முடியாமல் போனதும் என்னவென்றால் – சர்வதேச ரீதியிலான மாற்றங்களைத்தான்! " எனக் குறிப்பிட்டார் பென்டானா.

புரட்சி தீவிர கட்டத்தை அடைந்த வேளையில், சர்வதேசரீதியில் 'இரண்டாம் நிழல் யுத்தம்' வெடித்தது. றொனால்ட் றேகன் 1981 இல் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றபோது உலகளாவிய ரீதியில் கம்யூனிசத்தை 'ஒழித்துக்கட்ட' திடசங்கற்பம் பூண்டனர். இந்த இலக்குகளில் ஒன்றாக, நிக்கரகுவாவின் 'தற்போதைய அமைப்புமுறையை' இல்லாதொழிப்பதை கையில் எடுத்துக்கொண்டார். இராணுவ ரீதியில் கூலிப்படைகளுக்கும் கொன்ட்ராஸ்க்கும் (contras) ஆயுதம் வழங்குவதன் மூலமும், பொருளாதார ரீதியில் உலகவங்கி போன்ற நிறுவனங்கள் ஊடாக பொருளாதார தடைகளை ஏற்படுத்துவதன் மூலமும், அரசியல் ரீதியில் அமெரிக்க கொள்கையின் பின்னால் தம் சார்பானவர்களை நிர்ப்பந்திப்பதன் மூலமும் றேகன் தனது நோக்கத்தை செயற்படுத்த முனைந்தார்.

அமெரிக்காவின் இந் நடவடிக்கைகளுக்கு FSLN சமூக, பொருளாதார நிலைகளிலும் அரசியல், இராணுவ, இராஜதந்திர வழிகளிலும் முகம் கொடுத்தது. தேசிய ரீதியிலான தங்களது நிலப்பங்கீட்டு முறையை துரிதமாக மாற்றியமைத்தனர். தாம் அறிமுகப்படுத்திய கூட்டுறவு விவசாய முறையுடன் மட்டுமின்றி, விவசாயிகளின் கோரிக்கைப்படி தனியார் முறையிலும் நிலத்தை பங்கிட்டு வழங்க FSLN முன்வந்தது. அத்தோடு போர்ப் பிராந்தியங்களிலுள்ள விவசாயிகள் தங்கள் நிலப்பரப்பை பாதுகாப்பதற்காக AK47 இனையும் வழங்கியது.

அரசியல் ரீதியில் பல தரப்பினரும் பங்கேற்கும் வண்ணம் 'பல கட்சி முறையை' அங்கீகரித்தனர். அதேநேரம் FSLN மக்கள் மத்தியில் ஒரு பரவலான, புரட்சிகர மேலாண்மையை கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தினர். இதன் மூலம் புரட்சிகர வேலைத்திட்டங்களை பாதுகாக்கவும் விரிவுபடுத்தவும் முடியுமென நம்பினர்.

1985 இல் மக்கள்திரள் அமைப்புகள் நேரடி பிரதிநிதித்துவம் பெற்றிருந்த 'ஸ்ரேற் கவுன்சில்' கலைக்கப்பட்டு 'தேசியசபை' அமைக்கப்பட்டது. இத் தேசியசபையில் தேர்தல் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தனர். ஆயினும் 1985 க்குப் பின்னும் FSLN "மக்கள் ஜனநாயக" அடிப்படையிலான மக்கள் அமைப்புக்களின் தோற்றத்திற்கும் அவைகளின் அரசியல் பங்கேற்புக்கும் ஊக்கமளித்து வந்தது. இவைகளில் ஒன்றான UNAG (பெருந்தோட்ட,விவசாய சங்கம்) மற்றைய அமைப்புகளுடன் ஒப்புநோக்கில் வெற்றிபெற்றதொன்றாகும். ஆனால் எல்லா மக்கள் அமைப்புக்களும் சட்டசபை நடவடிக்கைகளில் பங்கேற்கக் கூடியதாக இருந்ததுடன், நாட்டின் உணவுப் பற்றாக்குறை, கட்டாய இராணுவ சேவை, உள்நாட்டில் நிலவும் வன்முறைகள், ...... சம்பந்தப்பட்ட விவாதங்களிலும் தங்கள் கருத்துக்களை முன்வைக்கும் வாய்ப்பினையும் பெற்றிருந்தனர்.

## புரட்சிகர ராஜதந்திரம் கொள்கை – நடைமுறை

சர்வதேச ரீதியில் FSLN தனது புரட்சியினை நியாயப்படுத்தவும், பாதுகாக்கவும் முயன்றனர். எல்லாவற்றையும்விட நிக்கரக்குவாவின் வெளிநாட்டுக் கொள்கையினை சுயமாக நிர்ணயிக்கும் உரிமையில் கவனம் செலுத்தினர். இது அமெரிக்காவிற்கு நேரடி சவாலாக அமைந்தது. ஏனெனில் சர்வாதிகாரி சமோசாவின் ஆட்சியில் அமெரிக்க நலனை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கையே கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

FSLN இன் வெளிநாட்டுக் கொள்கை 'புரட்சிகர அணிசேரல் கொள்கை' அடிப்படையில் வரையப்பட இருந்தது. மற்றைய நாட்டு அரசுகளிடமிருந்து ஆதரவைப் பெறவும், முடியாமல் போகும் பட்சத்தில் அந்நாட்டு சமூகங்களிடமிருந்து ஆதரவைப் பெறவும், FSLN முயற்சித்தது. இதைச் சாதிப்பதற்கு நிக்கரகுவாவின் புரட்சியினை ஆதரிக்கும் தோழமைக் குழுக்கள், தொழிற்சங்கங்கள், மத அடிப்படையிலான குழுக்கள் என்பவற்றிடமிருந்தும் மற்றும் தனியாரிடமிருந்தும் உதவியைப் பெற முடிவு செய்தது. ஆனால் அமெரிக்காவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலகுவாக உதாசீனப்படுத்தியோ, அல்லது அமெரிக்காவுடன் சில வடிவிலான இணக்கத்துக்கு வராமல் தமது புரட்சிகர திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் எழக் கூடிய தடைகளை கவனத்தில் எடுக்காமலோ FSLN நடந்து கொள்ளவில்லை.

1979 இல் அமெரிக்காவுடன் சினேகபூர்வமாக உறவை ஏற்படுத்தும் முயற்சியாக FSLN இன் உயர் அதிகாரிகள் குழு ஒன்று அமெரிக்காவுக்கு விஜயம் செய்ததுடன், நிக்கரகுவாவை கட்டியெழுப்புவதற்கு உதவும்படியும் வேண்டுகோள் விடுத்தனர். நிக்கரகுவாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு, ஒரு புரட்சிகர அரசுக்கும் மேற்கு நாடுகளின் மேலாதிக்க அரசு ஒன்றுக்கும் இடையிலான பரஸ்பர உறவாக கௌரவிக்கப்படலாம் என இத் தூதுக்குழுவினர் சிறுபிள்ளைத்தனமாக நம்பினர்.

புரட்சிகர நிக்கரக்குவா அரசு அமெரிக்க அரசிடம் தனது புதிய பாதுகாப்புப் படையினை பயிற்றுவிப்பதற்கான உதவியையும் கோரியது. கார்ட்டரின் அரசில் இந்த உதவிக்கான சாதகநிலை சிறிதளவு இருக்கவே செய்தது. இதற்கான காரணம், சன்டினிஸ்ராக்களுக்கு தாம் உதவுவதன் மூலம் 'சோசலிச' நாடுகளின் பக்கம் உதவிகோராமல் தடுக்க முடியும் என அமெரிக்க அரசு கருதியமையே ஆகும். கார்ட்டர் நிர்வாகத்தின் நிக்கரக்குவாவிற்கான பொருளாதார உதவியின் ஒரு பகுதியான 5.5 மில்லியன் டொலர் இராணுவ உதவி அமெரிக்க காங்கிரஸால் நிராகரிக்கப்பட்டது. பதிலாக கேலிக்கூத்தான முறையில் 23000 டொலரை 'பைனாக்குலர்கள்' வாங்குவதற்கும் மற்றும் ஆறு நிக்கரகுவா இராணுவ அதிகாரிகள் அமெரிக்க இராணுவ தளங்களுக்கு விஜயம் செய்வதற்கான செலவுத் தொகையாகவும் அமெரிக்க காங்கிரசு வழங்க முன்வந்தது.

நிக்கரக்குவாவின் ஆரம்பகால அணுகுமுறைகள் அமெரிக்காவுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கான முயற்சிகளைக் காட்டுவதாக அமைந்திருந்தன. இருந்தும் அமெரிக்க 'வலதுகளின்' புரட்சிக்கெதிரான நடவடிக்கைகள் இச் சந்தர்ப்பத்தை இல்லாமலே செய்துவிட்டது என்பதே வரலாற்று உண்மையாகும். கார்ட்டர் நிர்வாகத்தால் அனுமதிக்கப்பட்ட 75 மில்லியன் டொலர் உதவியில் 60 மில்லியன் மட்டுமே நிக்கரகுவாவிற்கு கிடைத்தது.

கார்ட்டரின் அரசு மாறி, ரேகன் பதவிக்கு வந்தவுடன் நிக்கரகுவாவின் புரட்சிகர அரசுக்கெதிராக அரசியல், இராணுவ, பொருளாதார வழிகளில் மட்டுமின்றி ராஜதந்திர ரீதியிலும் கருத்தியல் ரீதியிலும் எதிர்நடவடிக்கைகளில் துரிதமாக இறங்கியது. இதனால் 1981 தொடக்கத்திலேயே நிக்கரகுவா தனது வெளிநாட்டுக் கொள்கையில் 2 விடயங்களிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. ஒன்று, நிக்கரகுவாவிற்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கைகளை நிலைகுலைப்பது, மற்றது, யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவருவதற்கான வழிமுறைகளை தேடுவது என்றவாறு அமைந்தது.

ஆனால் நிக்கரகுவா அரசு அமெரிக்க அரசுடனான நல்லுறவை நோக்கிய தமது முயற்சிகளைக் கைவிட்டதென்றும் இல்லை. ஆனாலும் 1984 இல் CIA நிக்கரகுவாவின் துறைமுகங்களில் கண்ணி வெடிகளைப் பரப்பிவைத்த செயல் உட்பட கீழ்த்தரமான சண்டைக்கிழுக்கும் வேலையிலும் ஈடுபட்டது. இவை சம்பந்தமாக நிக்கரகுவாவினால் தொடரப்பட்ட வழக்கில் இத் துறைமுகங்களை திருத்தியமைக்கவும் பொதுமக்கள் மீது குண்டு வீசியதற்காகவும் கொன்ராஸ் (Contras)க்கு ஆயுதம் வழங்கியதற்காகவும் அமெரிக்கா நட்டஈடு கொடுக்க வேண்டும் என உத்தரவிட்டது. நிக்கரகுவா 17 பில்லியன் டொலரை இதற்கான நட்டஈடாக கோரியிருந்தது.

இதற்கிடையிலும் நிக்கரகுவா அமெரிக்காவுடன் ராஜதந்திர உறவுகளைப் பேணியே வந்தது. அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகளிலிருந்து தேவாலய கர்த்தாக்கள், தொழிற்சங்க தலைவர்கள் என .... சாதரண அமெரிக்க பிரஜைவரை நிக்கரகுவாவின் உண்மை நிலையை அறிந்து செல்ல ஊக்கமளித்தது. அமெரிக்க அரசுடன் ஒரு நல்லுறவை விரும்புவதாக குறிப்பிட்ட நிக்கரகுவா அரசு 'ஆனால் எந்த நிபந்தனைகளின் அடிப்படையிலும் அல்ல' என்பதையும் தெளிவாக வலியுறுத்தியது.

" நாங்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்துவது என்னவென்றால், நிக்கரகுவா அரசு அமெரிக்க அரசுடன் ஒரு புரிந்துணர்வையே விரும்புகிறது. இது, இரு நாடுகளுக்கிடையிலும் பரஸ்பரம் ஒருவரையொருவர் மதிக்கவும் ஒருவரது உள்விவகாரத்தில் மற்றவர் தலையிடாமல் நடந்துகொள்வதுமான வழிமுறையில் ஒரு உறவுமுறையைக் கட்டியெழுப்ப உதவும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக இருநாடுகளினதும் இறைமை, தனித்துவம், சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இந்த உறவுமுறையை ஏற்படுத்தவே விரும்புகிறோம். உலகின் சமாதானத்திற்கும் ஸ்திரத்தன்மைக்கும் அடித்தளமாக அமையும் இக்கோட்பாடுகள் சர்வதேச சாசனத்தில் குறிப்பிடப்பட்டவையேதான் !"

புரட்சிகர அரசானது நிக்கரகுவாவின் பொருளாதார முன்னேற்றத்திக்கும் அரசியல், ராஜதந்திர முனைப்புக்களுக்குமான சர்வதேச ஆதரவை பல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழிகளிலுமிருந்து பெறுவதற்கான முயற்சியில் இறங்கியது. தமது வெளிநாட்டுக் கொள்கையின் 3 இடைநிலை இலக்குகளை அடையும் நோக்குடன் சர்வதேச மட்டத்திலான ராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டது. முதலாவதாக, 'சன்டினிஸ்ரா அரசு அரசியல் சாசன அடிப்படையில் அமையாத அரசு' என்ற அமெரிக்காவின் பிரச்சாரத்தை முறியடித்தல், இரண்டாவதாக, நிக்கரகுவா—லத்தீன் அமெரிக்க நாடுகள் இடையிலான சமாதான முனைப்புக்களுக்கு ஆதரவு திரட்டல், மூன்றாவதாக, அமெரிக்க அரசின் நிலைப்பாட்டை அம்பலப்படுத்தி, தனிமைப்படுத்தல். மற்றும் மத்திய அமெரிக்கா மீதான அமெரிக்காவின் கொள்கைகள் அநீதியானவை என்றவகையில் வலுவிழக்கச் செய்தல் என்பனவற்றை நிக்கரகுவா அரசு இடைநிலை இலக்குகளாக வகுத்தது.

நிக்கரகுவாவின் மீதான அமெரிக்க அரசின் தலையீடு சர்வதேச சாசனத்தின் அடிப்படைக்கு முரணானது எனக்காட்டி அதை நிறுத்தும்படி கோரியது நிக்கரகுவா அரசு. நிக்கரகுவாவின் வெளிநாட்டு ராஜதந்திரிகள் சர்வதேச சட்டவிதிகளை மதிக்குமாறு அமெரிக்காவிற்கு இடைவிடாது வலியுறுத்தி வந்தனர். புரட்சிகர அரசு நிக்கரகுவாவின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவு வேண்டி நின்றதுடன், தனது நாட்டின் எல்லைகளை மதிக்கவும், தமது சர்வதேச ரீதியிலான விவகாரங்களில் தலையிடாமல் இருக்கவும் அமெரிக்காவிற்கு கோரிக்கை விடுத்தது. இரு நாடுகளினதும் பரப்பளவினதோ அன்றி பலத்தினதோ அடிப்படையிலன்றி நிக்கரகுவாவினை சட்டரீதியில் அங்கீகரிக்க வலியுறுத்தியது.

நிக்கரகுவாவின் அண்டைநாடுகளான கோஸ்ராறிக்காவும் (COSTA RICCA) பனாமாவும் சர்வாதிகாரிசோமோசாவுக்கு எதிரான FSLN இன் புரட்சியை ஆதரித்து வந்தனர். இந்த ஆதரவு தொடர்ந்தது 1980 இன் முற்பகுதியில் இந்நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் COSTA RICCA விலுள்ள San Jose என்ற இடத்தில் கூடி, தங்கள் நாடுகளிடையில் சண்டை சச்சரவற்ற நிலையை பேணுவதற்கான ஆர்வத்தை வெளியிட்டதுடன், இந் நாடுகளில் வேறுபட்ட அரசியல் அமைப்பு முறைகளை பரஸ்பரம் மதிப்பதெனவும், ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் மற்றைய நாடு தலையிடுவதில்லை எனவும் உடன்பாட்டுக்கு வந்தனர்.

ஆனால் போர் உக்கிரமடைந்தபோது அமெரிக்கா கொன்ராஸுக்கு (Contras) ஆயுதம் வழங்குவதுடன் நில்லாது, மற்றைய மத்திய அமெரிக்க நாடுகளிலிருந்து நிக்கரகுவாவை தனிமைப்படுத்த அந்த நாடுகள்மீது நிர்ப்பந்தத்தையும் மேற்கொண்டது. இதனால் நிக்கரகுவாவிற்கும் மற்றைய மத்திய அமெரிக்க நாடுகளுக்குமிடையிலான உறவு சீர்குலையத் தொடங்கியது. கொண்டுராஸ் (Honduras) நாட்டுடன் நிலவிவந்த நல்லுறவு பிரச்சினைக்குரியதாக மாறியது. 1982 இல் நிலைமை இன்னும் மோசமடைந்ததுடன் இரு நாடுகளுக்கிடையிலும் போர் மூளுமளவிற்கு உச்ச நிலையை எட்டியது. நிக்கரகுவாவின் தெற்கத்திய அண்டைநாடான Costa Ricca வுடனான உறவும் சீர்குலைந்தது. இருந்தும் Honduras உடனான உறவுபோல் மோசமடையவில்லை. இவ்விரு நாடுகளும் 1982 இலிருந்தே தமது இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபட்டனர்.

றேகன் நிர்வாகத்துடனான நிக்கரகுவாவின் உறவு சமாதானத்துக்கான குறைந்தளவு சாத்தியக் கூறுகளையே காட்டிநின்றன. நிக்கரகுவாவிற்கான அமெரிக்க தூதுவர் Lawrence Pezzullo 1981 ஏப்ரலில் பதவி விலகும்வரை அமெரிக்க நிர்வாகத்திற்கும் FSLN இற்கும் இடையில் ஏமாற்றுத்தனமான வேலைத்திட்டத்தை கொணரும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அமெரிக்க உள்விவகார அமைச்சகத்தின் உபசெயலாளரான Thomas Enders சன்டினிஸ்ராவினுள் உள்ள அதிருப்தியாளர்களுடன் இரகசியப் பேச்சுவார்த்தை நடாத்தினர். 1981 ஓகஸ்டில் மனாகுவாவில் நடந்த இந்த பேச்சுவார்த்தையில் Thomas Enders, "நிக்கரகுவா எல்சல்வடோர் புரட்சியாளர்களுக்கு (FMLN க்கு) ஆயுதம் வழங்குவதை நிறுத்தவதோடு, நிக்கரகுவா தனது இராணுவ ஆள்பலத்தை குறைக்கவும் முன்வந்தால் அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபடாது" என உறுதியளித்தார். அதேநேரம் நிக்கரகுவாவின் எல்லையில் Honduras ஆயுதப்படைகளுடன் அமெரிக்கா கூட்டு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டதால் 1981 ஒக்டோபர் இந்த பேச்சுவார்த்தைகள் முறிந்துபோயின.

FSLN இந்த நடவடிக்கையை நிக்கரகுவாவின் மீது அமெரிக்கா ஆக்கிரமிப்பதற்கான முஸ்தீபு எனக் கணிப்பிட்டது, இதை பகிரங்கமாகவும் வெளியிட்டது. இக் கருத்தை அமெரிக்கா தனக்கெதிரான பொய்ப் பிரச்சாரமென உருவகப்படுத்தி நிக்கரகுவாவுடனான பேச்சுவார்த்தையைக் கைவிட்டது. ஆனால் நிக்கரகுவாவோ அமெரிக்காவை பேச்சுவார்த்தைக்கு அழைத்ததுடன் இப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் 'சட்டபூர்வமான' பாதுகாப்பு நடவடிக்கைகளை தாம் அங்கீகரிப்பதாகவும் அறிவித்தது.

அத்துடன் நிக்கரகுவா சமாதானத்திற்கான தனது நடவடிக்கைகளை பல மட்டங்களிலும் மேற்கொண்டது. 1982 பெப்ரவரியில் மனாகுவாவில் இடம்பெற்ற லத்தீன் அமெரிக்க நாடுகளின் அரசியல் கட்சிகளின் மாநாடும் (COPPAL) அவற்றில் ஒன்றாகும். இம் மாநாட்டில் நிக்கரகுவாவின் ராஜதந்திர நடவடிக்கைகளுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மெக்சிக்கோ அதிபர் Jose Lopez Portillo ஆதரவளித்தது மட்டுமின்றி தனது சொந்த சமாதானத் திட்டமொன்றையும் முன்வைத்தார். அத்தோடு லத்தீன் அமெரிக்காவில் அமெரிக்காவின் தலையீடு 'வரலாற்றில் மிகப்பெரிய தவறாக' அமையும் எனவும் கருத்துத் தெரிவித்தனர்.

நிக்கரகுவா தனது ராஜதந்திர யுத்தத்தை ஐ.நா பொதுச்சபைக்கும், பாதகாப்புச் சபைக்கும் எடுத்துச் சென்றது. 1982 மார்ச் இல் அமெரிக்க செய்திப் பத்திரிகையான 'வோசிங்டன் போஸ்ற்' வெளியிட்ட தகவல்களிலிருந்து, நிக்கரக்குவாவிற்கு எதிரான போரிற்காக கொன்ற்ராஸ் (Contras) அமெரிக்காவிடமிருந்து 19 மில்லியன் டொலர்களை அமெரிக்க உதவியாகப் பெறுகிறார்கள் என்பது தெரியவந்தது.

நிக்கரகுவா மீதான கொன்ற்ராஸின் தொடர்ச்சியான தாக்குதல்கள் மற்றும் குண்டு வீச்சுக்களும் நடந்தேறியபின் நிக்கரகுவாவின் அதிபர் டானியல் ஒட்டேகா ஐ.நா. பாதுகாப்புச்சபையின் விசேட கூட்டத்தில் நிக்கரகுவாவின் முறையீட்டை முன்வைத்தார். அமெரிக்காவின் போக்கினைக் கண்டித்த ஒட்டேகா, சமாதானத்துக்கான ஒன்பது அம்ச திட்டமொன்றையும் சமர்ப்பித்தார். 1982 ஒக்டோபரில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஒரு அங்கத்துவ நாடாக (Non Permanent Member) – அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீறி– தெரிவு செய்யப்பட்டது. இது ராஜதந்திர வட்டாரங்களில் நிக்கரகுவாவின் செல்வாக்கை உயர்த்தியதுடன் அமெரிக்காவுக்கு பலத்த அடியாகவும் கருதப்பட்டது.

1982 இன் பிற்பகுதியில், நிக்கரகுவா சம்பந்தமான அமெரிக்காவின் கொள்கையானது போரை மையப்படுத்தியே இருந்தது என்பது தெளிவாகியது. போரின் தீவிரம் இரு விடயங்களை முன் தள்ளியது. ஒன்று லத்தீன் அமெரிக்க நாடுகள் தமக்குள் பேசி ஒரு உடன்பாட்டுக்கு வருவதற்கு உருப்படியான பங்களிப்பை செய்யத் தீர்மானித்தது. மற்றையது, தமது ராஜதந்திர நடவடிக்கைககளை ஆயுதரீதியிலும் போராடி நிலைநிறுத்தவேண்டிய நிர்ப்பந்தம்.

" வெளிநாட்டுக் கொள்கையின் வெற்றியானது, அடிப்படையில் இராணுவ கொள்கையின் வெற்றிகரமான தொழிற்பாட்டில் தங்கியுள்ளது, எவ்வளவுதான் புத்திசாதுரியத்துடன் வெளிநாட்டுக் கொள்கையை நாம் உருவாக்கியிருந்தாலும் ...... இராணுவ ரீதியில் நாம் சரியாக எதிர்கொள்ளாமல் விட்டிருந்தாலோ அன்றி எமது மக்கள் பொருளாதார, இராணுவ நெருக்கடிகளுக்கு எதிராக உறுதியுடன் முகம் கொடுக்காமல் போயிருந்தாலோ நாம் எல்லாவற்றையுமே இழந்து விட்டிருப்போம். எமது வெளிநாட்டுக் கொள்கையும் பலத்த அடியிலிருந்து தப்பிப் பிழைத்திருக்காது......... "

" நீங்கள் கேட்கலாம் ராஜதந்திர மட்டத்திலான எமது போரின்மூலம் இராணுவ ரீதியான போரையோ அல்லது அதன் விளைவான 28,000 நிக்கரகுவா மக்களின் சாவையோ தடுத்து நிறுத்த முடியவில்லையே என ! உண்மை தான்! ஆனாலும் எமது ராஜதந்திர யுத்தம் அமெரிக்காவின் தலையீட்டைச் சிதைப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளது. "

தொடரும்.........

✱ ✱ ✱ ✱ ✱

← 16

உருவாக்கவேண்டும் என்றும் ஆலோசனை கூறினார். இவரது ஆலோசனையின்படியே 1939ம் ஆண்டு ஆடி மாதம் 15ம்திகதி அதிகாலை 1.40 மணியளவில் இலங்கை-இந்தயகாங்கிரசு அமைப்பு உருவாக்கப்பட்டது.

ஆரம்பத்தினுல் இவ்வமைப்பினுள் தோட்டத் தொழிலாளர்களை இனைப்பது தொடர்பில் கொழும்பு வர்த்தகர்கள் தயக்கம் காட்டினர். ஆனால் நேரு, தோட்டத் தொழிலாளர்களையும் இணைப்பதன் மூலமே ஏனையவர்களின் கோரிக்கைகளையும் வெற்றிஅடயச்செய்யலாம் எனக்கோரி வற்புறுத்தியமையினாலேயே தோட்டத் தொழிலாளர்களை இணைப்பதற்கு அவர்கள் சம்மதம் தெரிவித்தனர். இவ்இலங்கை-இந்திய காங்கிரசே இந்திய தேசியத்தை முன்னெடுத்த முதலாவது அரசியல் இயக்கமாக விளங்கியிருந்தது. இதன் முதலாவது தலைவராக நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தலைவரும் புதுக்கோட்டை சட்டசபை உறுப்பினருமான V.R.M.V.A லக்மனன் செட்டியார் தெரிவு செய்யப்பட்டார்.


இந்தியர் செறிவாக வாழும் பகுதியெங்கும் இதன் கிளைகள் அமைக்கப்பட்டன. இதன் கிளை கம்பளையில் அமைக்கப்பட்டபோது அதன் தலைவராக தேயிலைத்தோட்டச் சொந்தக்காரனான சௌமியமூர்த்தி-தொண்டமான் தெரிவு செய்யப்பட்டார். இவ்வமைப்பு தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பனியாற்றுவதற்காக 1940மார்ச்சில் பெரி- சுந்தரம் தலைமையில் அப்புத்தளை கதிரேசன் கோவிலில்வைத்து இலங்கை - இந்தியகாங்கிரச் தொழிற் சங்கம் உருவாக்கப்பட்டது. இத்தொழிற்சங்கமே 1950இல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரச் எனப்பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

தொடரும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இளைய அப்துல்லா * இலங்கை

புள்ளை பிறந்து போனதடா
கண்ணா !
ரெத்தப் புடவை துவைக்க
'வண்ணாத்தியை'
கூட்டிவாடா கண்ணா !

கோயிலிலை சுவாமி
பிரதிஷ்டையடா கண்ணா !
அந்த
'நட்டுவனை' கொண்டுவந்து
தவில் தட்டடா !
கண்ணா !

செல்லத்துக்கு கலியாணம்
கண்ணா !
'தட்டார'
சின்னப்புவைப் பொன்னுருக்க
வரச்சொல்லடா கண்ணா !

சவம் விழுந்து போச்சுதடா
கண்ணா !
சவம் தூக்கி 'கோவியனை'
அவசரமாக் கொண்டுவந்து
சுடலைக்குச் சென்றுவாடா கண்ணா !

பாடைக்கு முன்னாலை
கண்ணா !
பறைச் 'சாம்பனை'
போகச் சொல்லடா
கண்ணா !

கக்கூசு நிறைஞ்சு போச்சு
கண்ணா !
மலம் அள்ள
'சக்கிலிய' சாந்தனைக்
கூட்டிவாடா கண்ணா !

பாளை தள்ளும்
தென்னை மரம் கண்ணா !
கள்ளிறக்க
'நள' நாதனிட்டைச்
சொல்லிப்போடா கண்ணா !

சட்டி பானை
கொஞ்சம் வேணும் கண்ணா !
'குச' குணத்தைப்
பாத்து சொல்லிவையடா கண்ணா !

பனை மரத்தைக்
கள்ளுக்குக் குடுக்க வேணும்
கண்ணா !
உந்த 'பள்ள' குடி
பரமனை அழைச்சு வாடா கண்ணா !

இந்த முடியைக் கொஞ்சம்
சிரைக்க வேணும் கண்ணா !
'அம்பட்டன்' அருணகிரி
வந்தானென்டா அறிவியடா
கண்ணா !

வயலை லேசாக் கொத்த வேணும்
கண்ணா !
'கைக்குழ்' வடிவேலை
புடிச்சுவாடா கண்ணா !

நாளைக்குக் "களரி" யடா கண்ணா !
'கரையார' நாதனிட்டை
மீன் வாங்கி வா கண்ணா !

வீட்டு வேலை செய்ய வேணும்
கண்ணா !
'தச்சன்' சண்முகத்தை
சொல்லி வையடா கண்ணா !

→

"கேற்றிலை" ஓட்டையடா
கண்ணா !
'கொல்லன்' கோவிந்தனை
அழைச்சு வாடா கண்ணா !

எல்லாத்தையும் செய்து போடு கண்ணா !
'வெள்ளாளர்'
நாங்களெல்லாம்
வேலை வாங்கும் சாதியடா கண்ணா !


மனிதா! ஓ மனிதா!
நெனைக்கையிலே வயிறெரியும் மனிதா !
சாதி நெருப்பாய் பத்திவிடும் மனிதா !
ஈழப் பூ மி காணுவோமா மனிதா !
இந்தக் கோதாரி நிலையுக்குள்ளை மனிதா !
வெட்டிவிட்டால் இரத்தம் ஓடும் மனிதா !
ரெத்தமெல்லாம் சிவப்புத்தானே மனிதா !
செத்த பின்னால் போகுமிடம் மனிதா !
இந்த கீழ்ச் சாதி மண்ணில் தானடா மனிதா !
இதை உணர்ந்து பார்த்துவிடின் மனிதா !
உன் பேதமை விளங்குமடா மனிதா !
கீழ்ச் சாதி - மேல்சாதி மனிதா !
அந்தக் கடவுளிடம் இல்லையடா மனிதா ! ✱

---

← 31

பதினெட்டு ஏப்ரலில் ஜனாதிபதி ஆட்சிக் கலைப்பு உத்தரவைப் பிறப்பித்தபோது, கூடவே எதிர்க்கட்சி தலைவர் பெனாசிர் பூ ட்டோவுடம் இருந்தார். புதிய தேர்தல் 14 யூ லையில் நிகழும் என்றும் அறிவிக்கப்பட்டது. 3 வருடகால இடைவெளியின் பின்பு பெனாசிர் பூ ட்டோ மீண்டும் ஆட்சிக் கட்டிலேறும் ஒரு அறிவிப்பு மணியாகவே ஒலித்தது. ஆனால் பாகிஸ்தான் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இத்தகைய நிலைமைகளைக் கலைத்து நவாஸ் அரசை மீண்டும் பதவியில் அமர்த்தியிருக்கிறது. இன்று இரு துருவங்களாகி விட்ட ஜனாதிபதியும் பிரதமரும் பாகிஸ்தான் அரசு இயந்திரத்தை எப்படி இயக்கப் போகிறார்கள் என்பதுதான் பெரிய கேள்வி. ஜனாதிபதி கானின் பதவிக் காலம் இவ் வருடத்தில் முடிவடைய இருப்பதால் பிரதமர் நவாஸிற்கு வாய்ப்புக்கள் அதிகமாகவே இருக்கிறது.

- தீபன்



- ஜெகன்

நண்பா !
பற்றை மேல்
ஓலை போட்டு
மூட்டிய நெருப்பினிலே
கிழங்கைச் சுட்டுக் கருக்கி
சுற்றிவர இருந்து
சுவைத்து மகிழ்ந்ததுவும்

அயலவர் தென்னையில்
அடிவானம் சிவக்கும் நேரம்
'திருடிய' இளநீரை
தித்திக்கக் குடித்ததுவும்

மீட்டும்போது
இனிமையான நினைவுகள் !

இரவல் காருடன் நின்று
நானனுப்பிய
புகைப்படத்தைப் பார்த்து
சுதந்திரமும் சந்தோசமும்
தேடி மாத்திரம்
வந்து விடாதே !

ஆலை இயந்திரத்துடன்
நானுமோர் இயந்திரமாய்
வீடு வந்ததும்
என் உணர்வுகளைக்
கொன்று தின்னும்
தனிமையான அறையுமாய்
என் காலம்.

நானிருக்கும் ஜேர்மனியில்
என் நகரம் தாண்டி
அடுத்த நகரம்
செல்லும்
சுதந்திரமும் மறுக்கப்பட்ட
நிலையில்
இங்கு நான் ! ✱



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரிட்ரியாவின் விடுதலை

எரிட்ரியாவின் தேசிய இன மக்கள் எதியோப்பியாவின் பிடியில் இருந்து இன்று விடுதலையடைந்துள்ளனர். **"எரிட்ரியா மக்கள் விடுதலை முன்னணியின்"** தலைமையில் முப்பது வருட காலமாய் குருதி இறைத்த போராட்டத்தில் இலட்சத்துக்கும் மேலான மக்களைப் படுகொலைக்கும் காயங்களுக்கும் இரைகொடுத்து இன்று அந்த விடுதலையைச் சாதித்திருக்கின்றனர். இன்றைய சர்வதேச அரங்கின் 'புதிய' நிலைமைகளில் உருவாகிவரும் பல புதிய தேசங்களின் வரிசையில் எரிட்ரியாவின் விடுதலையோடு இன்றைய ஆபிரிக்க கண்டத்தில் உள்ள மொத்த நாடுகளின் எண்ணிக்கை ஐம்பத்திரண்டு. **இன்றும்** சூடான், சோமாலியா போன்ற **நாடுகளில்** போராட்டங்களில் கொதித்துக் கொண்டிருக்கும் **பல்வேறுபட்ட** தேசிய இனங்களுக்கு எரிட்ரியாவின் விடுதலையானது புதிய உத்வேகத்தை அளித்திருக்கிறது.

1889 முதல் 1962 வரை இத்தாலிய, ஆங்கிலேய காலனிப் பிடிக்குள் சிக்கியிருந்த எரிட்ரியா தேசிய இன மக்கள் விடுதலைப் போராட்ட வரலாற்றுத் தொடக்கமும் இங்குதான் ஆரம்பிக்கின்றது. எழுபதுக்கு மேற்பட்ட இனங்களைக் கொண்ட எதியோப்பியாவில் 74 ம் ஆண்டு ரஷ்ய ஆதரவுடன் மன்னர் ஆட்சிக்கு முடிக்குப் போட்டு இராணுவ சர்வாதிகார ஆட்சியை நிறுவிய மொங்கிஸ்து மரியத்தின் ஆட்சிக் காலத்திலேயே **"எரிட்ரியா மக்கள் விடுதலை முன்னணியின்"** போராட்டம் முனைப்புற்றது.

ரஷ்ய சோசலிச முகமூடியுடன் எதியோப்பியாவின் தேசிய வருமானத்தின் பெரும் பகுதியை இராணுவத்திற்கு விழுங்கக் கொடுத்து, ஆயிரக்கணக்கான மக்களை பட்டினிக்குப் பலி கொடுத்தான் சர்வாதிகாரி மொங்கிஸ்து. இவனது ஆட்சியை தூக்கியெறியும் போராட்டத்தில் முன்னணி வகித்த **"எதியோப்பிய மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி"** உடனும், பழங்குடி இனத்தைச் சேர்ந்த **"ஒரோமோ விடுதலை முன்னணி"** உடனும் ஐக்கியப்பட்ட **"எரிட்ரியா விடுதலை முன்னணி"** 91ம் ஆண்டு மே 24 இல் எரிட்ரியாவின் முழுப் பிரதேசத்தையும் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. குறிப்பாக எதியோப்பியாவின் இரு துறைமுகங்களும் எரிட்ரியாவுக்குள் இருந்ததால் எதியோப்பிய இராணுவ அரசு கடல் மார்க்கத்தை இழந்தது.

91 இல் ரஷ்ய ஆதரவுடனான இராணுவ சர்வாதிகார ஆட்சியை முறியடித்த தேசிய இனங்கள் ஐக்கியப்பட்ட போராட்டத்தில், அமெரிக்க ஆதரவுடன் எதியோப்பிய அரசைக் கைப்பற்றிய **"எதியோப்பிய மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி"** எரிட்ரியாவின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, எதியோப்பியா கூட்டரசில் சேர்ந்து வாழும்படி வேண்டி நின்றது. இதில் 'சமாதான நடுவனாக' அமெரிக்காவும் முக்கிய பங்காற்றியது. ஆனால் எரிட்ரியா மக்கள் இதை விரும்பாததன் விளைவு இவ் வருடம் ஏப்ரல் மாதத்தில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நிகழ்ந்தது. மக்கள் இந்த தேர்தலில் தாங்கள் சுதந்திர நாடாக பிரிந்து போவதையே வலியுறுத்தினர்.

கடல் மார்க்கமற்ற எதியோப்பியா, எரிட்ரியாவின் இரு துறைமுகங்களையும் பயன்படுத்துவதற்கான ஒப்பந்தத்தை **"எரிட்ரியா மக்கள் விடுதலை முன்னணி"** யிடம் இருந்து பெற்றுக்கொண்டதோடு எரிட்ரியாவின் சுதந்திரத்தை அங்கீகரித்தது. **"எரிட்ரியா மக்கள் விடுதலை முன்னணி"** இன் தலைவர் நாட்டின் தலைவராகப் பதவியேற்க, மே 24 இல் எரிட்ரியா தன் சுதந்திர திருநாளைக் கொண்டாடியது.

இன்று எரிட்ரியா ஆபிரிக்க கண்டத்தின் வட கிழக்கே செங்கடலை ஒட்டியுள்ள ஒரு குட்டி நாடு. 30 வருட கால தேசிய இனப்போராட்டத்தின் விடுதலையைச் சாதித்திருக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயினும் அதன் அடுத்த நேர உணவுக்கு சிதைந்து கிடக்கும் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதற்கு அமெரிக்கா உள்ளிட்ட பணக்கார வல்லரசு நாடுகளிடமே கையேந்தி நிற்கிறது.

ஆனால் அமெரிக்காவோ 'முன்னாள் சோவியத்யூனியன் ஆபிரிக்கக் கண்டத்தில் மேலாதிக்கம் செலுத்திய' இராணுவ தளப் பிரதேசங்களைத் தனதாக்கிக் கொள்ளும் வேகத்தில் சோமாலியாவை, எதியோப்பியாவை உடைத்தும், சேர்த்தும் தன் ஆதிக்க விளையாட்டை செங்கடலுக்குள் விரும்பியவாறு நடாத்துகின்றது.

நேற்று எதியோப்பியா
இன்று சோமாலியா, எரிட்ரியா
நாளை சூடான் . . . . . . . . . ?

*

**பாகிஸ்தானில் அதிர்ச்சி**

பாருமே எதிர்பாராத ஒன்று,
அதுவும் பாகிஸ்தானின் வரலாற்றில்!
ஆயினும் அது நிகழ்ந்திருக்கறது.

ஜனாதிபதி 'இசாக்கான்' ஆல் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கலைக்கப்பட்ட பிரதமர் 'நவாஸ் சாறிவ்' இன் அரசை உயர் நீதிமன்றத்தின் பார்வையில் 'குற்றமற' தீர்மானிக்கப்பட்டு மீண்டும் நாவாஸ் சாறிவ் பிரதம மந்திரியாக அரசில் அமர்த்தப்பட்டிருக்கிறார்.

உண்மையில் இது ஆச்சரியமானது. ஆயினும் இதன்பின்னால் ஆடப்பட்ட அதிகாரப் போட்டி நாடகம் ஒன்றை நாம் பார்க்கத் தவறக் கூடாது. பூட்டோவைத் தூக்கிலேற்றி 70 களிலும் 80 களிலும் இராணுவ சாவாதிகாரத்தைக் கட்டவிழ்த்துவிட்ட 'ஷியா உல் கக்' இன் 'விமானக் கொலை' யைத் தொடர்ந்து கடந்த 5 வருட காலமாக பாகிஸ்தானின் அதியுயர் அதிகாரம் கொண்ட மனிதனாக இருப்பவர் ஜனாதிபதி 'கான்' தான்!

ஷியா உல் கக் இன் கொலையின்பின் மெல்லத் துளிர்விட்ட ஜனநாயக சூழலில் ஜனநாயகத்தை உயர்த்திப் பிடித்து வெற்றி பெற்றார், பூட்டோவின் மகளும் அவரது மக்கள் கட்சியும்! ஆயினும் இவரின் அரசும் கொஞ்சக் காலமே உயிர் வாழ முடிந்தது. ஊழல் குற்றச்சாட்டு வெள்ளத்தில் மிதந்த பூட்டோ மகளின் அரசு 90 இல் கலைக்கப்பட்டு நிகழ்ந்த தேர்தலில் நவாஸ் ஷரீப் கூட்டு முன்னணி அரசைக் கைப்பற்றியது.

தென்னாசியாவில் இந்தியாவுடனான இராணுவ சம பலம் பொருந்திய நிலையில் அல்லது மிஞ்சக்கூடிய வகையில் பாகிஸ்தானை வளர்த்துவிட்டதில் அமெரிக்காவின் பங்கு பெரியது. ஆயினும் மாற்றமுற்றுவரும் இன்றைய சர்வதேச நிலைமைகளில் – இந்தியா அமெரிக்காவிடம் 'பல்லிளித்து' நிற்கும் நிலையில் – அமெரிக்கா பாகிஸ்தானுக்கான இராணுவ, பிற உதவிகளைக் குறைத்துக்கொண்டதோடு, இந்திய காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தானின் தலையீட்டைக் காரணம் காட்டி விசேட இராணுவ விமான தளபாடங்கள் விநியோகத்தைத் தடைசெய்தது. ஆனால் பாகிஸ்தானோ சீனாவிடமிருந்து (பிரதமர் நவாஸ்) விமானத் தளபாடங்களைக் கொள்வனவு செய்தது, செய்து வருகிறது.

அமெரிக்காவின் கட்டளையை மீறி இயங்கப் போகும் பாகிஸ்தான் அரசை அமெரிக்காவும் சரி, பாகிஸ்தான் இராணுவ உயர்பீடமும் அதன் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஜனாதிபதிகளும் சரி பதவியில் நீடிக்க வைக்க விரும்பவில்லை. இதுவே நவாஸ் இன் அரசை கலைப்பதற்கான காரணங்களில் முக்கியமானதாக இருக்கிறது. இதுதவிர பெனாசிர் பூட்டோ தலைமையிலான 'மக்கள் கட்சி' அதிகாரத்துக்காக ஆலாய்ப் பறந்து கொண்டும், ஜனாதிபதி நம்பிக்கையுரியவராக கைகோர்க்கும் புதிய சூழலிலேயே பிரதமர் நவாஸ் அரசு கலைக்கப்பட்டது. குறிப்பாக இவ் வருட ஆரம்பத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே எழுந்த அதிகாரப் போட்டியும், உறவு விரிசலும், ஜனாதிபதி – பெனாசிர் நெருக்கமும் ஊழல் குற்றச்சாட்டுகள் காரணங்களினூடாக (ஏதோ பாகிஸ்தானில் புதியது போல் ) ஆட்சிக் கலைப்புக்கு உந்தியது.

29 →



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கருத்தாடல்

**தை - மாசி '93 (மனிதம் 20)**

# கருத்தாடல் பகுதியில் மூ. சிவகுமாரன் வெளிக்கொணர்ந்த கருத்துக்கள் பற்றி . . .

**- மாறன், கனடா**

கரிகாலனினது கட்டுரை தொடர்பாக சமர் மனிதம் இதழ் மீது திரிபுவாதிகள் என முத்திரை குத்தியது பற்றிய விளக்கமளிக்க முற்பட்ட கட்டுரையாளர் மூ.சிவகுமாரன் ஆரோக்கியமான விமர்சனப்போக்குகளையும் மாற்றுக் கருத்துகளுக்கு கருத்துகளால் முகம் கொடுக்கும் பண்பையும் வலியுறுத்துகின்ற அதே சந்தடி சாக்கில் திரிபுவாதம் என்பதற்கு புதுவகையிலான ஒரு விளக்கத்தைக் கொடுக்கின்றார்.

"மார்க்சியத்தை கேள்விக்குட் படுத்துவதையோ இயங்கியல் விதிக்கமைய விமர்சிப்பதோ கேள்விக்குட்படுத்துவதோ சரியா எனும் சர்ச்சை மார்க்சியம் எனும் சமூக விஞ்ஞானம் படைக்கப்பட்டதில் இருந்து காலம் காலமாய் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. மார்க்சியத்தை இயங்கியல் விதிக்கமைய விமர்சிப்பதையோ திரிபுவாதம் என்கிறார்கள்." எனக் குறிப்பிடுகின்றார்.

சமர் சஞ்சிகைக்குழு, மனிதம் குழுவினரை திரிபுவாதிகள் என முத்திரை குத்தியதில், இருந்த தவறுடன் ஒப்பிட்டு உலகரீதியில் மனிதகுலத்தின் முன்னேற்றப்பாதையில், புரட்சியின் பாதையில் பெரிதும் இடையூறுகளை ஏற்படுத்திவிட்ட, மனிதகுலத்துக்கு கலங்கரை விளக்காக தெரிந்த புரட்சிப்பாதையை சீர்குலைத்துவிட்ட திரிபுவாதத்திற்கு ஒட்டுமொத்தமாக கட்டுரையாளர் வக்காலத்து வாங்கி அதை வளர்ச்சிப் போக்காக காட்டும் கைங்கரியத்தை செய்துள்ளார்.

மூ.சிவகுமாரன் இக்கட்டுரையில் மார்க்சியம் பற்றியும் அவைபின்பு வளர்த்தெடுக்கப்பட்டது பற்றியெல்லாம் குறிப்பிடுகின்ற பரிமாணத்துடன் பார்க்கும்போது, ஸ்டாலினது மறைவின்பின் குருச்சேவ் இனால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிராகரித்து முன்னெடுக்கப்பட்ட திரிபுவாதப்பாதை பற்றியும், சீனாவில் முதலாளித்துவ மீட்சி முயற்சிகளை கட்சியில் இருந்தே ஆரம்பித்து முறியடித்திட மக்களினது முன்முயற்சிகளை கட்டவிழ்த்துவிட்ட மகத்தான கலாச்சாரப் புரட்சிகளை முன்னெடுத்த மாவோவினது மறைவின்பின்பு கட்சி மற்றும் ஆட்சியின் தலைமையை கைப்பற்றிய டெங்கும்பல் மாவோவினது நடவடிக்கைகளை நிராகரித்து திரிபுவாதப் பாதையை முன்னெடுத்த வரலாறுகளை, முக்கியமாக மார்க்சிய-லெனினிய புரட்சியாளர்களால் திரிபுவாதம் என முறியடிக்கப்பட வேண்டியதாக விமர்சிக்கப்படும் இவ்வகையிலான போக்குகளை இவற்றையெல்லாம் மூ.சிவகுமாரன் அறியாதிருப்பாரென்று கருதமுடியாது. திரிபுவாதம் பற்றி விளக்கமுற்பட்ட அவர் இவற்றை சிறிதேனும் சுட்டிக்காட்ட முயற்சியாது குருச்சேவ்இனது வழித்தோன்றல்களும் டெங்கும்பல்களும் மார்க்சியத்தை இயங்கியல் விதிக்கமைய விமர்சிக்கவோ, கேள்விக்குட்படுத்துவதையோ செய்தவர்களாக இனம் காட்டும் வகையில் திரிபுவாதம்பற்றி வரையறை செய்திருப்பது வாசகர்களால் பெரிதும் சிந்தனையில் கொள்ளப்படவேண்டியது என்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அத்தகையவர்களின் இயங்கியல் வளர்த்தெடுப்பு சோவியத் யூனியனையும் நவசீனத்தையும் எங்கு கொண்டுபோய் விட்டுள்ளதென்பதை உலகு அறியும்.

மார்க்சியத்தை மூலவர்கள் மட்டுமல்ல அதன் பின்னால் வந்த பல அறிஞர்களும் வளர்தெடுத்தார்கள் என்பது உண்மையே. உற்பத்தி முறைகளில், உலகப்பொருளாதார கட்டமைப்பில் மாறி வருகின்ற வளர்ச்சி நிலைமைகளுக்கும் குறிப்பான காலகட்டங்களுக்குமேற்ப மார்க்சியம் இயங்கியல் போக்கில் வளர்த்தெடுக்கப்பட்டு வருவது இயல்பானதே காலகட்டங்களுக்கேற்ப மார்க்சியம் மாறிவரும் காலகட்டங்களுக்குகேற்ப, குறிப்பான சூழ்நிலைமைகளில் லெனின், மாவோ போற்றோர் இப்பணியில் பெரும் பங்கு ஆற்றியுள்ளனர். அதுவே லெனினியம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாவோசியமாக மார்க்சியத்திற்கு வளம் சேர்த்தது.

இன்றைய காலகட்ட பிரச்சனைகளுக்கு, குறிப்பான எந்தெந்தப் பிரச்சனைகளுக்கு மார்க்சிய அணுகுமுறை பொருத்தமற்றது. எவ்வகைப்பட்ட புதிய தத்துவமானது குறிப்பான பிரச்சனைகளுக்கு தீர்வளித்து சமூக முன்னேற்றத்தை உந்திச்செல்லும் என்பதை தெளிவாக அடையாளம் காட்டும்போதே எவரும் மார்க்சியத்தின் போதாமையையோ அல்லது அதன் வளர்ச்சிப் போக்கின் தேவையையோ உணரமுடியும் ஏற்கமுடியும். மார்க்சியம் குறிப்பான பிரச்சனைகளில் பொருத்தமற்று இருப்பதற்கான மாறிய அடிப்படைகள் பற்றிய போதிய விரிவான ஆய்வுகளைத்தராது மார்க்சியம் இதற்கு தீர்வுதராது, லெனினியக் கட்சிக் கோட்பாடுகளை விமர்சனத்துக்கு உள்ளாக்க வேண்டுமென்று எவருமே சமூக நலன்மீதான அக்கறையுள்ளவரோ-அக்கறையற்றவரோ கூறிவிடலாம். அவ்வகையான அணுகுமுறை தத்துவங்களை வளர்த்தெடுப்பதற்கு எவ்விதத்திலும் பலன் அளிக்காதென்பதே உண்மை.

குறிப்பாக கரிகாலன் மனிதத்தில் லெனியக் கட்சிக் கோட்பாடுகளை விமர்சனத்துக்கு உள்ளாக்கவேண்டும் என்னும்போதும், மூ.சிவகுமாரன் சோவியத்யூனியனின் வீழ்ச்சி கிழக்கைரோப்பிய நாடுகளின் உடைவுகள் தேசிய நிகழ்வுப்போக்கு குறித்து ஒரு சரியான புரிதலை ஏற்படுத்த தூண்டி இருக்கின்றன எனக் குறிப்பிடும்போதும் அப்பிரச்சனையை தெளிவாக ஆராய்கின்ற அணுகுமுறையை கொள்ளாது வெறுமனே குழப்பத்துக்குள்ளாக்குகின்ற அணுகுமுறையே மேற்கொள்கின்றார்கள். சோவியத்யூனியனின் வீழ்ச்சியானது அதன் நிகழ்வுக்கு எத்துணை பரந்த பரிமாணங்களை, ஆய்வுக்குரிய அம்சங்களைக் கொண்டுள்ளது. அதன் வீழ்ச்சிக்கான கால்கோள், சோசலிச நிர்மாணப் பாதையிலிருந்தான பிறழ்வு எப்போதோ ஆரம்பித்து விட்டதையும் அதற்கான சகல அம்சங்களையும் சகல பரிமாணங்களிலும் ஆய்வு செய்து உண்மைகளை கண்டறியும் போக்கைவிட்டு, சில நிகழ்ச்சிகளின் அடிப்படையில் மட்டும் முடிச்சுப்போட்டுக் காட்டுவது ஆரோக்கியமானதல்ல .

உதாரணமாக புரட்சி நடந்தேறிய நாடுகளில் முதலாளித்துவம் மீட்சியடைந்ததை வைத்து மார்க்சிய லெனினிய தத்துவமே தோல்விகண்டு விட்டதாக எடுத்தஎடுப்பில் கூறுவதோ வர்க்கப் போராட்ட வடிவம் பொருத்தமானதல்ல என்று கூறுகின்றதுமான ஓர் அணுகுமுறையோ சரியானவற்றை கண்டறியும்போக்கை கொண்டதா என்பதை வாசகர்கள் சிந்தனையில் கொள்ளவேண்டும். கரிகாலன் தனது கட்டுரையில் லெனினியக் கட்சிக்கோட்பாடுகள் எவை எவை தவறானவை குறிப்பான காலகட்டங்களில் இவை எவ்வகையில் பாதகமாக இருந்துள்ளன என்பதையும் எப்படியான கட்சிக்கோட்பாடுகள் பொருத்தமானவை என்பதையும் விளக்கியிருப்பின் அது ஆரோக்கியமானது. மூ.சிவகுமாரன் சோவியத் யூனியனின் உடைவு, கிழக்கைரோப்பிய நாடுகளின் வீழ்ச்சிகளுடன் தேசிய நிகழ்வுப்போக்கு எவ்வாறு சம்பந்தப்படுகின்றது. மார்க்சியத்தை பொறுத்தவரை தேசிய நிகழ்வுப்போக்கை புரிந்து கொள்வதிலும் கருத்துருப்படுத்துவதிலும் தோல்வியடைந்து இருப்பது விரிவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதாக அவர்கூறுகின்றதையிட்டு விபரமான தகவல்களை, அதையொட்டி சோவியத்' னியனில் கிழக்கைரோப்பாவில் தேசிய நிகழ்வுப்போக்குகளை மார்க்சியம் எவ்வாறுகையாண்டது? மார்க்சிய கோட்பாடுகளுக்கமையவே தொடர்ச்சியாக கையாளப்பட்டு வந்ததா? சோசலிசப் பாதையிலிருந்து மாறிப்போனதாக விமர்சிக்கப்பட்ட காலங்களின் பின்பும் அணுகுமுறையில் மாற்றமில்லையா? என்பதையும் சமூக ஏகாதிபத்தியமாக சோவியத்யூனியன் சீரழிந்து மற்றைய நாடுகளை ஆக்கிரமித்த காலங்களின் பின்னும்கூட தனது நாட்டில் தனது தேசிய இனங்களது பிரச்சனைகளை மார்க்சிய லெனினிய கோட்பாடுகளுக்கு அமையவே பின்பற்றி வந்துள்ளதா? ஆப்கானில் ஆக்கிரமிப்பின்போதும் ஆப்கானித்தானத்தில் மார்க்சிய அணுகுமுறையே பின்பற்றியதா? என்ற விபரங்களையும் இவற்றில் ஏற்பட்ட தோல்விகள் உண்மையிலுமே மார்க்சிய அணுகுமுறையின் தோல்விதான் என்று தான் புரிந்ததை போதிய விபரமான தகவல்களுடன் முன்வைத்திருப்பின் அது ஆரோக்கியமானது. இனிமேலாயினும் மூ.சிவகுமாரன் இவ் விடயங்களையிட்டு விரிவான தகவல்களையும் ஆய்வினையும் அளிப்பாரெனின் அது வாசகர்களை தெளிவடைய செய்ய பெரிதும் உதவியானது.

இவ்வாறாக தமது தரப்பு கருத்துக்களை அதனை நிறுவுகின்ற போதிய தரவுகளை அளிக்காமல் பல அறிஞர்களின் கூற்றுக்களை மேற்கோளாக காட்டுவது இக்கட்டுரைகளை பரந்த தளத்திற்கு எடுத்துச் சொல்லவோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடயங்களை தெளிவாக கிரகிக்கவோ உதவாது.

கரிகாலனும்சரி, மு.சிவகுமாரனும்சரி லெனினிசக்கட்சி கோட்பாடுகளை விமர்சனத்துக்குள்ளாக்கவோ, தேசிய நிகழ்வுப் போக்குகளில் மார்க்சியத்திற் போதாமையையோ சுட்ட வரும்போது அதற்கான மறுதரப்பை,தீர்வை தெளிவாக்கவில்லை. வெறுமனே கேள்விக்குள்ளாவது மட்டுமே செய்கின்றார்கள்.

சோவியத்யூனியனின் உடைவோ, கிழக்கைரோப்பிய வீழ்ச்சிகளோ தேசிய இனப்பிரச்சனைகளைத் தீர்ப்பதில் மார்க்சிய - லெனினிய அணுகுமுறையின் தோல்வியை காட்டவில்லை. சோவியத்யூனியனின், கிழக்கைரோப்பாவின் இன்றைய நிலைமைகள் கம்யூனிச முறையின் விளைவுகள் என்று முதலாளித்துவ வாதிகள் ஊளையிடும் போதும் (கிரிமினல்களின் பெருக்கமும், விபச்சாரமும்கூட கம்யூனிச முறையால் கிடைத்ததென காட்டுகின்றார்கள்.) எவ்வாறு அவை திரிபுவாதத்தின், மீட்டமைக்கப்பட்ட முதலாளித்துவத்தின் பரிசுகளோ அதேபோலவே அந்நாடுகளில் உருவாகிய தேசிய இனப் பிரச்சனைகள், தேசியநிகழ்வுப்போக்குகள் திரிபுவாதப்பாதையினது விளைபொருளாக இருக்கின்றது என்பதே உண்மை. சோவியத்யூனியன் சோசலிசக் கட்டுமானப்பாதையில் உறுதியுடன் நின்றபோதும் மாபெரும் பாசிச எதிர்ப்பு யுத்தத்தின்போதும் அம்மக்கள் எவ்வாறு ஒரே மனிதராக அணிதிரண்டு நின்றார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேணடும். சோசலிசக் கட்டுமானத்தில் ஊன்றி நின்ற காலங்களில் சோவியத்யூனியனில் தேசிய இனப்பிரச்சனைகளைக் கையாளும்போது தேசியப்பிரச்சனைகள் பற்றிய மார்க்சிய லெனினிய அணுகுமுறை பொருத்தமானதாக இருக்கவில்லை எனக்கருதும் தரப்பினர் வரலாற்றுப்பூர்வமாக அதைநிறுவவேண்டுமெனக் கோருகின்றேன். அப்பட்டமாக சோசலிசக் கட்டுமானப் பாதைகளிலிருந்து விலகிய பின்னும் மார்க்சிய லெனினியத்தின் கேந்திரமான விதிகளை கைவிட்டு புரட்சிப்பாதைக்கு துரோகமிழைத்த காலகட்டங்களுக்கும் பின்னைய காலங்களை அத்தத்துவங்களின் அளவு கோல்களாக கொள்ள முயற்சிப்பது அபத்தமானது.

கட்டுரையின் இரண்டாவது பகுதி எம்மிடையே நிகழுகின்ற விவாதங்கள் குவிகின்ற புள்ளிகளாக

1) தேசிய விடுதலைப் போராட்டத்தில் புலிகளை மதிப்பிடுவது.

2) தேசிய விடுதலைப் போராட்டமா அல்லது ஐக்கியப்பட்ட புரட்சியா என்கின்ற இரு விடயங்களை குறிப்பிடுகின்றது.

**இவ்விவாதக்களத்தில் இருக்கின்ற சக்திகள்.**

(அ) முதன்மையாக தமிழ்த்தேசிய இனவிடுதலையை ஆரோக்கியமான திசையில் முன்னெடுக்க உழைக்கும் சக்திகள்.

(ஆ)முதன்மையாக வர்க்க நலன்களை வலியுறுத்தி அதற்கிசைவாக இலங்கையின் பிரச்சனைகளை கையாளவிரும்பும் சக்திகள்.

மற்றும் மனித உரிமைகள், ஜனநாயகத்திற்கான சக்திகள் ஆகும்.

தமது தரப்பு கண்ணோட்டங்களுக் கிசைவான முறையில் இத்தரப்புகள் விவாதங்களை நிகழ்த்தி வருகின்றன.

**விடுதலைப்புலிகள்**

1)தரகு முதலாளிகளின் நலன்களின் பாதுகாவலர்களா?

2)முதலாளித்துவ தேசிய வாதிகளா?

3)குறுந்தேசிய வாதிகளா?

4)குழுநலன்கள் மட்டுமே கொண்டவர்களா அல்லது வேறு வரையறைகளுக்குள் அடங்குபவர்களா?

என்பதில் ஓர் மதிப்பீட்டினை வந்தடைய வேண்டியது அவசியமெனினும் சமூக நலன் மீதான அக்கறை கொண்ட சக்திகள் எவருமே விடுதலைப்புலிகளின் ஓர் தெளிவான பக்கத்தை அடையாளம் காண்பதில் எவ்வித தடுமாற்றத்தையும் கொண்டிருக்கமுடியாது. அத்தெளிவான பக்கம் தங்களைத்தவிர மக்களினது போராட்டப்பாதையில் பிரவேசிக்கின்ற எந்த சக்திகள் மீதும் தெளிவாகப் பிரகடனப்படுத்தியிருக்கும் அழித்தொழிப்பு பாசிச நடவடிக்கைகள் ஆகும். யாரும் புலிகளை எப்படியும் மதிப்பிடலாம். தேசிய சக்தியாகவோ, ஐக்கியமுன்னணி அமைக்கத்தயாராகவோ எதைவரையறுத்தாலும் புலிகளதுதரப்பு வரையறை ஒன்றேஒன்றுதான் என்பதை அவர்கள் மிகமிகத் தெளிவாகவே பிரகடனப்படுத்தியுள்ளார்கள். தங்களைத்தவிர போராட்டக்களத்தில் பிரவேசிக்கின்ற எவரையும் பூண்டோடு ஒழித்துக்கட்டுவது என்பதுவே அதுவாகும். எனவே இவ்விவாதங்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈடுபடும் சக்திகள் எத்தரப்பினர் எனினும் எல்லோரையும் எதிர்கொள்கின்றதான புலிகளின் பாசிச அழித்தொழிப்புப் போக்குகளை முறியடிப்பது எவ்வாறு என்பதைக் கண்டாகவேண்டும். அதற்காக புலிகள் குறித்த மதிப்பீட்டுக்கு வந்தடைவது எவ்வகையிலும் முக்கியத்துவம் குறைந்ததல்ல. குறிப்பிட விரும்புவது எதுவெனின் புலிகள்பற்றிய மதிப்பீடுகளில் இருந்து நாம் அவர்களின் ஜனநாயக விரோத பாசிச போக்குகளை அளவிடமுயற்சிக்கக்கூடாது என்பதே. அது மிகமிகத் தெளிவாகவே உள்ளங்கை நெல்லிக்கனியாகவே உள்ளது. இப்பரிசோதனையில் தங்கள் உயிர்களை பரிதாபகரமான முறையில் புலிகளின் அழித்தொழிப்புக்கு சமர்ப்பித்த பல போராளிகளினது அழிவின் படிப்பினையும் கண்முன்னேயுள்ளது.

மேலும் போராட்டம் உச்ச நிலையில் உள்ளபோது போராட்ட சக்திகளை மதிப்பிடுவது கடினமாக இருக்கும். உதாரணமாக வெள்ளையருக்கெதிரான போராட்டத்தில் இந்தியத் தேசிய காங்கிரசின் வர்க்க அடிப்படையை சரியாகக்கணிப்பிடுவதில் தவறு இழைத்து இந்திய கம்யூனிஸ்ட்டுக்கள் காங்கிரசின் வாலாக சீரழிந்தனர். அதிகாரத்தை நிறுவிய பின்பே இந்திய தேசிய காங்கிரசின் உண்மைச் சொரூபம் தெளிவானது. அதுபோலவே ஆட்சிமுறைகளை நிறுவும்போதும் தொடர்ச்சியான நடவடிக்கைப் போக்குகளை ஆய்வுக்கு உட்படுத்தியுமே நாம் சரியானவற்றை வந்தடைய முடியும். எனவே சமூக நலன் மீதான அக்கறைகொண்ட சக்திகள் அனைவருமே புலிகளை மதிப்பிடுவதில் கவனம் குவிக்கும்போதே அனைவருக்கும் பொதுவான பிரச்சனையாகிய புலிகளின் பாசிசத்தை, அவர்கள் தமிழ்மக்களின் போராட்டப்பாதையில் நிறுவியிருக்கும் தனி இயக்க சர்வாதிகாரத்தை முறியடிக்க ஒன்றுபட்டு முயற்சிக்க வேண்டும். மூ.சிவகுமாரன் கூறுவதுபோலவே புலிகள் இன்னமும் தமிழ் தேசியத்தின் நலன்களுக்காகவும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதும் புலிகள் அமைப்பின் கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் தமிழ் தேசியத்தின் விடுதலையை புலிகள் அமைப்பினுடாகத்தான் வென்றெடுக்கமுடியும் என்று நம்புகின்ற தேச பக்தர்கள் என்பதுவும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளபோதே புலிகள் தமிழ் மக்களின் சனரஞ்சக கருத்துப்பரப்பை ஆயுதத்தால் மட்டுமல்லாமல் ஆழ்மனதில் உறைந்து கிடந்த பண்பாடு, புராணங்கள், கலாச்சாரங்களை உயர்த்திப்பிடிப்பதன் மூலமும் கைப்பற்றிக் கொண்டார்கள் என்று கூறுவது மிகையானதே. புலிகள் தங்களைத்தவிர வேறு எந்த சக்தியையும் போராட்டக்களத்தில் அனுமதிப்பது தமது தற்கொலைக்கு ஒப்பானதே என்பதுபோல சிறு ஜனநாயக சக்திகளையும் சிறு எதிர்ப்புக் குரல்களையும்கூட தேடித்தேடி நசுக்குவதை பார்க்கும்போது தமது கருத்துப்பலத்தில் அவர்கள் பெரிதும் தங்கவில்லை என்பதும் தற்போதைய சூழ்நிலைமைகளில்கூட மக்கள் புலிகளின் பின் அணிதிரளவில்லை என்பதுவும் புலி உறுப்பினர்களின் வயதெல்லையைக் கணிப்பிட்டாலே புரியும். கட்டாய பாசு அமுலாக்கம் முதலான அவர்களினது நடவடிக்கைகள் மக்களிற்கும் அவர்களுக்குமான இணைப்பைக்காட்டுகின்றது. தம்மைத்தவிர வெறுஎவ்வித ஊடகமும் அரச பயங்கரவாதத்திற்கு, பேரின வாதத்திற்கு எதிரான எதிர்ப்புணர்வுக்கு வடிகாலாக அமையாமல் தமது தனித்தலைமையை ஆயுதத்தின்மூலம் நிறுவியிருப்பதன்மூலமே தமிழ்மக்கள் தமதுபக்கம் இருப்பதை திணித்து இருக்கின்றார்கள். சங்கிலியனும் சோழர்களும் கொடுரமன்னர்களானாலும் தமிழ்தேசியத்தின் குறியீடாகும்போது பிரபாகரனும் இதே குறியீட்டில் அடக்கப்படுவதில் ஆச்சரியப்பட என்னஇருக்கிறது? என மூ.சிவகுமாரன் எழுதியிருக்கிறார். ஆச்சரியப்பட என்ன இருக்கிறதெனகூறி நிறுத்திவிடுவது போதுமானதல்ல. சிங்கள இளைஞர்களை துட்டகைமுனுக்கலாகவும் தமிழ் இளைஞர்களை எல்லான்கள் ஆக்குவதிலும் சமுகத்திற்கு, இனத்திற்கு என்ன பயன்விளையப்போகின்றது? இது அவமானப்பட வேண்டியதும் இப்பிற்போக்கு தேசியவெறிகளுக்கும், நிலப்பிரபுத்துவக்கால பிற்போக்கு பண்பாட்டு கலாச்சாரங்களுக்கும் எதிராக உறுதியுடன் அவற்றை முறியடித்திட அணிதிரள்வதே சமூகத்தை முன்னேற்றிச் செல்கின்ற பண்பாடு, கலாச்சாரங்களை பரப்புவதே முற்போக்காளர், புரட்சியாளர்களின் பிரதான பணியாகும்.

அடுத்ததாக தேசிய விடுதலைப் போராட்டமா? ஐக்கயப்பட்ட புரட்சியா? என்ற தலைப்பில் விவாதம் முனைப்புப் பெற்றிருப்பதாக கட்டுரையாளர் மூ.சிவகுமாரன் குறிப்பிடுகின்றார். இது போலவே இன்றைய காலகட்டத்தில் நடைபெறுகின்ற அனேக விவாதங்களில் தமிழ் தேசியஇன விடுதலைப் போரையும் ஐக்கியப்பட்ட புரட்சி என்பதனையும் எதிர் எதிராக நிறுத்துகின்ற போக்கே காணப்படுகின்றது. இப்போக்கு கடந்த காலங்களில் இடதுசாரிகள்

www.tamilarangam.net

எனப்படுவோர் தேசியத்தை நிராகரித்து வெறுமனே வர்க்கம் பற்றி பேசியதினால் அதிலிருந்து வருகின்ற மதிப்பீடு ஆகும். இன்றைய ஏகாதிபத்திய சகாப்தத்தில், புதிய ஜனநாயக புரட்சியை பாட்டாளிவர்க்கம் தலைமை தாங்கி சாதிக்கவேண்டிய இன்றைய காலகட்டத்தில் தேசியப்போராட்டத்தையும் வர்க்கப் போராட்டத்தையும் எதிரெதிராக காட்டுகின்ற அதாவது தேசிய விடுதலைப் போராட்டமா? ஐக்கியப்பட்ட புரட்சியா? என்ற கேள்வியே அடிப்படையில் தவறானது.

தேசியம், சர்வதேசியம் என்கின்றதான இரு விடயங்கள் உள்ளன. தனியே தேசியம் பற்றி மட்டுமே அதாவது தனது சொந்த தேசிய இன நலன்கள் பற்றி மட்டுமே அக்கறைப்படுவது முதலாளித்துவ தேசியவாதமாகும். தனது சொந்த தேசிய நலன்களை சர்வதேசிய நலன்களுக்கு பாதகமில்லாத வகையில் வென்றெடுக்க செயலாற்றுவது அதாவது தேசியத்தையும் சர்வதேசியத்தையும் ஒன்றுக்கொன்று ஒத்திசைந்ததாக கையாள்வதே பாட்டாளிவர்க்க அணுகுமுறையாகும்.

எனினும் மூ.சிவகுமாரன் உட்பட அநேகர் தேசிய விடுதலைப் போராட்டமா? ஐக்கயப்பட்ட புரட்சியா? என்ற கேள்வியை எழுப்புவதன் மூலம் ஐக்கியப்பட்ட புரட்சி என்பது தேசிய விடுதலையை உள்ளடக்கியது அல்ல தேசிய விடுதலைப் போராட்டத்தை கவனத்திற் கொள்ளாது மறுதலிக்கின்றது என்கின்றதான ஒரு அவதூறை, மாயையை உருவகிப்பதன்மூலம் அதைக் களங்கப்படுத்த முயற்சிக்கின்றார்கள். தேசிய நலன்களையும், சர்வதேசிய நலன்களையும் எதிரெதிராக நிறுத்துவதன் மூலம் வர்க்கப்பார்வையை பலவீனப்படுத்துகின்ற அதைக் கொச்சப்படுத்துகின்ற பணியைச்செய்கின்றார்கள்.
இக்கண்ணோட்டத்திற்கு பழைய இடதுசாரிகளின் அணுகுமுறையை இவர்கள் காரணமாகக் காட்டுவார்கள் எனின் பழைய இடதுசாரிகளை புரட்சியாளர்களாக இன்று யார் ஏற்றுள்ளார்கள் என்பதே எனது கேள்வியாகும்.

எமது தேசிய இனத்தின் விடிவோ, இலங்கைதேசத்தின் விடிவோ வர்க்கப்போராட்ட அணுகுமுறையினூடாகத்தான் சாதிக்கப்பட முடியும் என்பதை ஏற்றுக்கொண்டுள்ள சக்திகள் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனைகள் வர்க்க நலன்களுக்கு முரணற்றமுறையில் கையாளப்பட முடியும் என்பதில் தெளிவும் உறுதியும் கொள்ளவேண்டும்.

குறிப்பான இன்றைய இலங்கையின் நிலமைகளின்கீழ் நான்கு வேறுபட்ட தனித்தன்மை கொண்ட போராட்ட களங்கள் காணப்படுகின்றன.

**1) வடக்கு கிழக்கு பாரம்பரிய தமிழ் தேசிய இனப்போராட்டம்.**

**2) பெரும்பான்மை சிங்கள மக்களது போராட்டம்.**

**3) தமிழ் பேசும் முசுலீம் மக்களின் போராட்டம்.**

**4) மலையக தமிழ் மக்களின் போராட்டம்.**

நாம் எமது தேசிய இனநலன்கள்பற்றி மட்டுமே சிந்திக்கின்றதான முதலாளிய தேசிய வாதப் போக்கில் இருந்து விடுபட்டு எமது பார்வைகளை விசாலிக்கின்றபோது இலங்கையின் சகல மக்களினதும் பொது எதிரி ஒன்றே என்பது புலனாகின்றது. நாம் சமூகத்தின் முன்னேற்றம்பற்றி பேசுகின்றவர்களாக சிந்திக்கின்றவர்களாக இருப்பதினால் முரணற்றதும் சமுதாயத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியை உத்தரவாதம் செய்கின்றதுமான வர்க்க நலன்களின் அடிப்படையிலேயே இப்பிரச்சனைகளை கையாள இயலும். தனித்தனியே அப்பிரிவு மக்களினது நியாயமான அபிலாசைகளை பூர்த்திசெய்கின்ற விதமாகவும் அதேவேளை அடுத்தகட்ட வளர்ச்சிக்கு சமூகத்தை இட்டுச்செல்லும் விதமாகவும் இப்பிரச்சனைகளைக் கையாள்வதே வர்க்க அணுகமுறையாகும். எனவே

1) பாரம்பரிய வடக்கு கிழக்கு தமிழ்த் தேசியஇன பாட்டாளிவர்க்க சக்திகள் தமது தேசிய இன சுயநிர்ணய உரிமைப்போரை அம்மக்களினது பாதுகாப்பு, நிலம், மொழி, பண்பாடு ஆகியவற்றை பாதுகாப்பதற்கான போரை முன்னேடுக்கும் அதேவேளை மற்றைய தேசிய இனங்களது சுயநிர்ணய உரிமைக்கும் இனசமத்துவத்தை வலியுறுத்தியும் போராட வேண்டும்.

2) அதேபோல தம்மை தனித்துவமாக அடையாளம் காண்கின்ற மலையக மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்கும், நிலத்துக்கும், அரசியல் உரிமைக்குமாக வர்க்கத்தலைமையில் போரை முன்னேடுக்க வேண்டும். அவர்களினது போராட்டம் பிரதானமாக சரண்டல் முறைக்கு எதிரானதாகவும் வர்க்கப்போரின் தளமாகவும் அமையும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3) அதேபோல முசுலீம் மக்கள் தமது தனித்துவத்தை , தமது தலைவிதியை தாமே தீர்மானிக்கின்ற சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க அவ்இனப் பாட்டாளிகளின் தலைமையில் அணிதிரள வேண்டும்.

4) சிங்கள தேசிய இன மக்களைப் பொறுத்தவரை ஏகாதிபத்திய சார்பு, முதலாளித்துவ அரசுக்கெதிராக தமது சமூக, அரசியல், பொருளாதார வளர்ச்சிக்கும் தேசத்தின் சுயாதிபத்தியத்துக்குமான போராட்டங்களை புரட்சிகர வர்க்கத்தலைமையின் கீழ் முன்னெடுக்கவேண்டும்.

தமது தேசிய விடுதலைக்கான போராட்டத்தில் ஒவ்வொரு பிரிவினரும் ஈடுபடும்போதே மற்றைய பிரிவினது போராட்டங்களை அங்கிகரிப்பதும் இணைந்து கொள்வதும் அவசியமாகின்றது. இப்போராட்ட சக்திகள் தமது குறிப்பான பிரச்சனைகளுக்கான போராட்டத்தை நிகழ்த்தும்போதே, இவற்றை இணைத்து சமுதாய வளர்ச்சியை உத்தரவாதம்செய்கின்றதான அதாவது இலங்கையின் புதிய ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுகின்றதான ஒருமையப்பட்ட தாபனத்தை, கட்சியை நிறுவவேண்டும்.

இதுவே தமது தேசிய நலன்களுக்கு பாடுபடும்போதே பிறதேசிய இனங்களினது நலன்களையும் கணக்கிலெடுக்கின்றதும் தேசியத்தை சர்வதேசியத்துக்கு இசைவாக கையாள்வதுமாகும். இதுவே பாட்டாளிவர்க்க அணுகுமுறையாகும். இதுவே இனங்களிடையே அவநம்பிக்கைகளை நீக்கி பரஸ்பர புரிந்துணர்வையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தும்.

ஆகவே தேசிய விடுதலைப்போரா? ஐக்கியப்பட்ட புரட்சியா? என்கின்ற விதமாக இரண்டையும் எதிரெதிராக நிறுத்துவது தவறானதாகும். தேசிய விடுதலைப்போரை கையில் எடுத்துக்கொண்டே அதை ஐக்கியப்பட்ட புரட்சியாக அதாவது இலங்கை தேசத்தின் புதியஜனநாயக புரட்சி இலக்கைநோக்கி அதன் நலன்களுக்கு இசைவாக நடாத்திச் செல்வதே பரந்து பட்ட மக்களுக்கும் பாட்டாளிவர்க்க நலன்நாடும் சக்திகளுக்கும் ஏற்புடையது. இதுவே இலங்கைத் தீவின்மீது சுரண்டலை, தமது ஆதிக்கத்தை நிலைநிறுவியிருக்கும் ஏகாதிபத்தியங்கள், பிராந்திய வல்லரசுகளுக்கு எதிராக இலங்கைத்தேசத்தின் சுபீட்சத்துக்கும் சுயாதிபத்தியத்திற்குமான போரில் மக்களை இணைக்கவல்லது.

← 17

நிதி, ஆயுதம் போன்ற பெருமளவு உடைமைகளும் கைப்பற்றப்பட்டன. பின்னர் 90 ம் ஆண்டு வில்லியம் கிளார்க் இன் அரசு தேர்தலில் வெற்றி பெற்றபின், கட்சி மீதான தடை நீக்கப்பட்டு மண்டேலாவும் விடுதலை செய்யப்பட்டார். இக் காலகட்டம் வரையும் தலைமறைவு நிலையில் இருந்துகொண்டே கட்சிமீதான தடையை நீக்கவும், மண்டேலாவை விடுதலை செய்வதற்குமான போராட்டங்களிற்கு தலைமை தாங்கி நடத்தியதுடன், அதனை ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக வளர்த்தெடுத்ததில் ஒலிவர் தம்போவின் பங்கு கணிசமானது.

23 ஏப்ரல் 93 இல் மரணமடைந்த இவரது இறுதி அஞ்சலி மே முதலாம் திகதி (மே தினத்தன்று) நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் அஞ்சலி செலுத்தினர். சுதந்திரத்திற்கும் சமாதானத்திற்குமான நோபல் பரிசைப் பெற்ற Desmond Tutu அவர்கள் ஒலிவர் தம்போவைப் பற்றி குறிப்பிடும்போது,

*"தம்போ நெருக்கடியானதும் கடினமானதுமான சூழ்நிலைகளிலெல்லாம் தனது அமைப்பை ஒன்றிணைத்து முன்னெடுத்துச் சென்றார்"* என்கிறார். ●

← 38

*பின் மக்கள் மத்தியில் உரையாற்றிய Christian Brunner தனது தோழி தெரிவாகியிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும், தனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். Ruth தனது உரையில், தான் ஒரு பெண் மட்டும் இருந்து பெரிதாக எதுவும் செய்து விடமுடியாது எனவும் இன்னும் பல பெண்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவாக வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.*

*இத் தேர்தலில் பெண் உறுப்பினர் தெரிவானதை எதிர்த்து தீவிர வலதுசாரிக் கட்சியான Auto Partai வெளிநடப்புச் செய்தது. இவ் வாக்கெடுப்பில் தமது பெண் பிரதிநிகள் தெரிவாகாது போனால் தமது பாராளுமன்ற முழு அங்கத்துவத்தை நீக்கிக் கொள்வதாக S.P.D அறிவித்திருந்தது. ஒரு பெண் உறுப்பினரை தெரிவு செய்ததோடு, பாரிய எதிர்ப்புக்களையெல்லாம் முகம்கொடுத்து இத் தேர்தலில் ஒரு பெண்ணை அமைச்சராக்கியதன் மூலம் இக் கட்சி பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது.*

☐ வரதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுவிஸ் பாராளுமன்றத்தில் . . . .

**பங்குனி - சித்திரை '93 இதழில் இடம் பெற்றிருக்க வேண்டிய**
**இக்கட்டுரை இடப்பிரச்சினை காரணமாக இவ்விதழில் பிரசுரமாகிறது.**

சுவிற்சர்லாந்தின் அரசியலில் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற சம்பவங்கள் பலரது கவனத்தையும் ஈர்க்கும் வகையில் அமைந்திருந்தது. சுவிஸ் சமஷ்டிப் பாராளுமன்றத்தில் இறுதியாக உள்நாட்டலுவல்கள் அமைச்சராகப் பதவி வகித்தவரும், முன்னர் ஏனைய துறைகளில் அமைச்சராகப் பதவி வகித்தவருமான -சுவிஸ் சமூக ஜனநாயகக் கட்சியைச் (S.P.D) சேர்ந்த- ரெனி பெல்பேர் (Rene Felber) சுகவீனம் காரணமாக தனது பதவியை ராஜினாமாச் செய்திருந்தார். சுவிஸ் பாராளுமன்றத்தில் இவரது அங்கத்துவம் பிரெஞ்சு மொழி பேசும் மாநிலங்களுக்குரியதாகும். அத்துடன் இவ்விடத்திற்கு அக் கட்சியைச் சேர்ந்த ஒருவரை நியமிப்பதற்கு கட்சிக்கு வாய்ப்பும் இருந்தது.

இவ்விடத்திற்கு S.P.D கட்சியானது ஜெனீவா இல் பிரபல தொழிற்சங்கத் தலைவியும், பெண்ணிலைவாதியும், இளமைப் பருவத்திலிருந்தே சுவிஸில் இடம்பெற்ற பல்வேறு போராட்டங்களில் பங்கெடுத்தவருமான Christian Brunner என்ற பெண் பிரதிநிதியை ஏகமனதாகத் தெரிவுசெய்தது. இவரது பெயரை கட்சி அறிவித்ததைத் தொடர்ந்து, ஏனைய கட்சிகள் இவர் ஒரு பெண் என்பதால் பாராளுமன்றத்திற்கு வருவதைத் தடுப்பதற்கான பிரச்சாரங்களை பல வழிகளில் மேற்கொண்டனர். ஏற்கனவே 'எலிசபெத் கொப்' (Elisabeth Kop) என்ற பெண் பாராளுமன்ற உறுப்பினரை 'அவரது கணவரது ஊழல் மோசடி காரணமாக' பதவிநீக்கம் செய்தபோது மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரமே Brunner க்கு எதிராகவும் மேற்கொள்ள ப்பட்டது. இவ்வாறான பிரச்சாரம் கட்டவிழ்த்து விடப்பட்ட போதும், கட்சி Brunner ஐ நிறுத்துவதென முடிவெடுத்தது.

இக் கட்சியில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் பெண்களாக இருப்பதும் இதற்கு இன்னும் ஓர் வலுவான காரணமாகும். இதற்கான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் இடம்பெற்றபோது கட்சியால் நிறுத்தப்படாத Francis Mathey என்ற அதே கட்சியைச் சேர்ந்த ஆண் ஒருவரை பாராளுமன்றத்தில் மற்றைய கட்சிகள் தெரிவுசெய்தன. ஆனால் Mathey தனது தெரிவை ஏற்றுக்கொள்வது பற்றிய முடிவு எதையும் அறிவிக்காததால் கூட்டம் ஒருவாரம் பின்போடப்பட்டது. இவ் ஒருவார கால இடைவெளிக்குள் சுவிஸ்ஸின் பல பாகங்களில் பெண்கள் தங்களுக்கு "பாராளுமன்றத்தில் ஒரு பெண்பிரதிநிதி தேவை" என்ற கோசத்தை முன்வைத்து ஆர்ப்பாட்டங்களும் கண்டனக் கூட்டங்களும் நடத்தினர்.

பாராளுமன்றம் மீண்டும் கூடுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக S.P.D கட்சி Brunner உடன் சேர்ந்து Ruth Dreifuss என்ற இன்னொரு பெண்பிரதிநிதியையும் தெரிவுசெய்தது. இவரும் ஒரு பெண்நிலைவாதியும் தொழிற்சங்கவாதியும் ஆவர். மீண்டும் பாராளுமன்றம் கூடியது. கூட்டம் ஆரம்பித்ததும் ஏற்கனவே தெரிவாகியிருந்த Mathey தனது தெரிவை தான் ஏற்றுக் கொள்ளவில்லையென அறிவித்தார். இதனைத் தொடர்ந்து இரண்டாவது தடவை வாக்கெடுப்பு இடம்பெற்றது. இதில் முதல் கட்டவாக்கெடுப்பில் Ruth வெற்றி பெற்றார். Brunner முதற்கட்ட வாக்கெடுப்புடன் வாக்கெடுப்பில் இருந்து வாபஸ் வாங்கிக் கொண்டார். பின்னர் Ruth பாராளுமன்ற உள்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.


இரண்டாவது கட்ட வாக்கெடுப்பு நடந்த அன்று பாராளுமன்றத்துக்கு வெளியே 10,000 மேற்பட்ட பெண்களும், ஆண்களும் கூடி தமது ஆதரவைத் தெரிவித்த வண்ணமிருந்தனர். இவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் மேற் கொண்டனர். அதிகாலை 5 மணிக்கே மக்களை கட்டுப்படுத்துவதற்காக பாராளுமன்ற முன்றலைச் சுற்றி கம்பி வேலிகளை அமைத்திருந்தனர். வாக்கெடுப்பின்

37 ——>



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆந்திராவில் முதுபெரும் கம்யூனிஸ்ட் போராளி கைது!

ஆந்திராவை உலுக்கிவந்த மக்கள் யுத்தம் குழுவின் தலைவர் கொண்டபள்ளி சீதாராமையா தனியாக இருந்த போது போலிசு சுற்றிவளைப்பில் கைதானார். மக்கள் யுத்தம் குழு ஆந்திராலில் பல கொரிலா நடவடிக்கைகளுக்காக பிரபல்யமானது. இவ்வமைப்பு கூலிச் சங்கம்(RCS), மாணவர் அமைப்பு(RSU), இளைஞர் அணி(RYL), புரட்சிகர எழுத்தாளர் அமைப்பு என்பவற்றை ஏற்படுத்தியும் கிராந்தி(தெலுங்கு), தொழிலாளர் பாதை, முன்னணிப்படை, கலம் போன்ற வெளியீடுகள் மூலமும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்திவந்தது. ஆந்திராவில் உள்ள அடிலாபாத், நிகாமாபாத், வரங்கால், யக்யால், கிழக்கு கோதவாரி போன்ற பிரதேசங்களில் தளங்களை நிறுவி மக்கள் ஆதரவுடன் அரசுக்கெதிராக போட்டி அரசு போன்று செயற்பட்டு வந்தது. ஆனாலும் தனிநபர் பயங்கரவாதநடவடிக்கைகள், உட்கட்சி பிரச்சனைகள் போன்றவற்றால் அடிக்கடி உடைவுகள் ஏற்படுவது நக்சல்பாரிப்புரட்சியாளர்களைப் பொறுத்தவரை பலவீனமாகவே இருக்கிறது. மக்கள் யுத்தம் குழுவில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக கொண்டபள்ளி சீத்தாராமையாவை கட்சியில் இருந்து நீக்கப்பட்டதாக தெரிகிறது.

1972 ம் ஆண்டு சாருமயுந்தாரின் மரணத்தின் பின் ஆந்திராவிவ் நக்சல் பாரிகள் தறிமாலா நாகிரெட்டி தலைமையில் ஆந்திரப்பிரதேச புரட்சியாளர்கள் புனரமைப்புக் குழு என்ற அமைப்பை நிறுவி செயற்பட்டு வந்தார்கள். இது 1973 ம் ஆண்டு 3 ஆக பிளவு பட்டு சந்திரபுல்லா ரெட்டி தலைமையில் (APCCCR) வெங்கடேசுவரராவ் தலைமையில் (UCCRI), கம்யூனிச புரட்சியாளர் குழு (ROC) என்று செயற்பட்டு வந்தனர். கம்யூனிச புரட்சியாள் குழுவில் மீண்டும் பிளவு ஏற்பட்டு மக்கள் யுத்தம் குழு 1975 இல் இருந்து கொண்டபள்ளி சீதாராமையா தலைமையில் செயற்பட்டு வந்தது.

ஆந்திராவில் மட்டுமல்ல இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலும் நக்சல் பாரிபோராளிகள் மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகவும், பெரும் பண்ணையார்கள், ஊழல்பேர்வழிகளுக் கெதிராகவும் போராடிவருகின்றனர். இவர்களுக்கு கிராமப்புற மக்களிடமும், ஆதிவாசிகள், மலை வாழ் மக்களிடம் பெருத்த ஆதரவு கிடைக்கிறது.

இந்திய சினிமாக்களும், மஞ்சள் பத்திரைகைகளும் நக்சல்பாரிப் போராளிகளின் போராட்டத்தை வெறும் மக்கள் விரோத பயங்கரவாதப் போராட்டமாக கொச்சைப்படுத்துகின்றன. இந்த அவதூறுகளையும் கடந்து மக்கள் ஆதரவுடன் இந்திய ஆளும் வர்க்கங்களின் அடக்குமுறைகளுக்கெதிராக நக்சல்பாரிகள் போராடி வருகின்றனர்.

மக்கள் யுத்தம் குழுவின் தலைவர் கொண்டபள்ளி சீதாராமையா தனது 74 வது வயதில் இப்போது மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார். முன்னர் ஒரு தடவை கைது செய்யப்பட்டபோது தோழர்களின் எதிர் நடவடிக்கையால் விடுவிக்கப்பட்டிருந்தார். இந்த வயோதிக நிலையிலும், இவரின் கைதை சரண் என்று மஞ்சள் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தும் அதற்கு மறுப்பு தெரிவித்து தான் கைது செய்யப்பட்டது தற்செயல் நிகழ்வு என்றும் தான் சரண் அடையவில்லை என்று கூறியுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனித — காலம்

**— பாலமோகன்**

மனித காலம் முடிந்துவிட்டதாய்
ஒரு நினைப்பு !
எனது மூளை
அரித்துக் கொண்டிருக்கிறது
பேச மறுக்கிறது வாய்.

உண்பதற்கு மட்டுமே வாய்
என்றானபோது
மூக்குத் துவாரத்தினூடோ
மல வாசலினூடோ
உண்பதை மாற்றிவிட்டாலென்ன ?

இதயத்தை மூடிவிட்டு
தொண்டைக்கு மேலிருந்தே
சிரிப்பைச் செய்து தொலைக்கும்
முகங்களுக்கு
இதயம் எதற்கு ?

எனக்கு ஓர் ஆசை !

மூளை, வாய், இதயம்
மூன்றையும் அகற்றிவிட்டு
ஓர் உருவத்தைப் படைத்துவிட ஆசை

இதற்கு என்ன பெயர் வைக்கலாம் ?

மனித மிருகமா
மிருக மனிதனா
என்றெல்லாம் குழம்பி
இன்னமும் விடை கிடைக்கவேயில்லை

'மனிதன்'
என்றொரு புனை பெயரை இட்டுவிடலாம்

இந்த உருவத்துக்கு
முதுகெலும்பை வளைத்துவிட்டாலென்ன,
அது நிமிர மறுக்கும்போது !

திரும்பிப் பார்ப்பதற்குள்
குண்டொன்று துளைத்து விடலாம்
ஓடித் தப்புதற்குள்
'செல்' ஒன்று சரித்து விடலாம்

இந்த இனமும் அழிந்து விடாமல்
காப்பதற்கு
பிடரியிலும் பக்கவாட்டிலும்
கண்களை சொருகி விட்டாலென்ன ?

இன்னும் இரண்டோ மூன்றோ
கால்களையும் பொருத்தி விடலாம்

இந்த 'மனிதனை'
மியூசியத்துக்கு அனுப்பிவையுங்கள் !
இது என் கோரிக்கை

அந்த உருவத்தை
துப்பாக்கி முனையில் நிறுத்தி
நேர்த்தியாய்
காட்சிக்கு வைப்பதை
'அவர்கள்' செய்வார்கள்

முட்கம்பியாலோ பனை மட்டையாலோ
கூண்டுகள் அமைத்து
அதற்குள்
'சுதந்திரமாய்' உழல விடுவதையும்
அவர்கள் செய்வார்கள்

மனிதர்கள் வாழும்
காலமொன்று வருமானால் .....
இந்த 'மனிதன்'
எமது மனிதகாலத்தைப்
பறை சாற்றட்டும் !

*